52-2

உ

சிவமயம்

தஞ்சாவூர் தவத்திரு

ஸ்ரீபால்சுவாமிகள் எனப் பெயர் வழங்கும்

ஸ்ரீ நாராயண ஞான தேசிகர்

# வரலாற்றுச் சுருக்கமும் தோத்திரப் பாடல்களும்

□

வரலாற்றுச் சுருக்கம் தொகுத்தவர் :

கருப்பக்கிளர் திரு சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள்

□

தோத்திரப்பாடல்கள் இயற்றியவர் :

டி தருமலிங்கம் பிள்ளையவர்கள்

□

4811
Q1:332ப

வெளியிட்டவர் :

ஸ்ரீ பால்சுவாமிகள் மடாலயத் தலைவர் :

தவத்திரு மு. கோ. கிருஷ்ணசாமி சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ பால் சுவாமிகள் மடம்

கரந்தை, : : தஞ்சை 613 008.

உரிமையுள்ளது] 1985 [விலை ரூ. 2-50

A811
Ol:3320
52-2
உ.கோவிலூர்
KOVILOOR MADALAYAM
மடாலயம்

உ

சிவமயம்

தஞ்சாவூர் தவத்திரு

ஸ்ரீபால்சுவாமிகள் எனப் பெயர் வழங்கும்

ஸ்ரீ நாராயண ஞான தேசிகர்

# வரலாற்றுச் சுருக்கமும் தோத்திரப் பாடல்களும்

□

வரலாற்றுச் சுருக்கம் தொகுத்தவர் :

கருப்பக்கிளர் திரு சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள்

□

தோத்திரப்பாடல்கள் இயற்றியவர் :

பூண்டி தருமலிங்கம் பிள்ளையவர்கள்

□

வெளியிட்டவர் :

ஸ்ரீ பால்சுவாமிகள் மடாலயத் தலைவர் :

தவத்திரு மு. கோ. கிருஷ்ணசாமி சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ பால் சுவாமிகள் மடம்

கரந்தை, : : தஞ்சை 613 008.

உரிமையுள்ளது] 1985 [விலை ரூ. 2-50

காம முழுமையுங் கொன்று மதுவுனக்குக்
கழலிரண்டுந் தருமென்று மிதனை நம்பி
நேமமுடனே நித்யமான நின்மல னே நீ
நெஞ்சமகிழ்ந்து நாராயண சுவாமியென்
றஞ்சலி செய்வினையனல் மெழுகாகும் (போற்)

2 மாதர்களாசை யைக் கொண்டு — அவர்
கண்களாம் வலையின் மென்மேலுங்
கட்டுண்டு கணக்கிலாத
ஏதமடைந்தது முண்டு அதனைக் கண்டு
எடுத்தோதி னேனிதை விண்டு
பார்த்தாகிலும் நீ
போதபரிபூரண சோதி சொரூபமதைப்
போற்றி நாராயண சுவாமி யென்றிட வினை
மாற்றிவைத் தருளுகந் தூட்டுமலர்ப் பதத்தைப்
(போற்)

3 உயிராம் பயிர்களெரிந்து போகாமல் நர
வுருவெடுத் துலகெழுந்து தீங்குகண் முற்றும்
அயில்சே ரயிலையெறிந்து தடிந்தருளைக்
குயினுகி மேன்மேற் சொரிந்து
முத்தியளித்துச்
செயிரிலாத சின்மய சிவமதணிற் கலந்த
சிற்பரனென்னு நாராயண சுவாமியின்
நற்பதந் தொழுதிட நமனும்வந்
தணுகிடான் (போற்)

### நூற்பயன்

நாரணப்பேர்ப் பரஞ்சாமி நற்சரிதம் கற்போர்கள்
பூரணப்பே ரின்பம் புகுந்துநல் — சீரணப்போய்
நாடுமறை யந்தம் நவிலுகிற மெய்ஞ்ஞான
வீடு புகுவார் விரைவு.

ஓம் நாராயண ஞான தேசிகாய நம ;
ஓம் தத் ஸத்

வே. கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்
H811
Ql:3324

48 11
வ:33 20 52-2
உ. கோவிலூர்
KOVILOOR
MADALAYAM
மடாலயம்

உ

சிவமயம்

தஞ்சாவூர் தவத்திரு
ஸ்ரீபால்சுவாமிகள் எனப் பெயர் வழங்கும்
ஸ்ரீ நாராயண ஞான தேசிகர்

# வரலாற்றுச் சுருக்கமும்
# தோத்திரப் பாடல்களும்

☐

வரலாற்றுச் சுருக்கம் தொகுத்தவர் :
கருப்பக்கிளர் திரு சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள்

☐

தோத்திரப்பாடல்கள் இயற்றியவர் :
பூண்டி தருமலிங்கம் பிள்ளையவர்கள்

☐

வெளியிட்டவர் :
ஸ்ரீ பால்சுவாமிகள் மடாலயத் தலைவர் :
தவத்திரு மு. கோ. கிருஷ்ணசாமி சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ பால் சுவாமிகள் மடம்
கரந்தை, : : தஞ்சை 613 008.

உரிமையுள்ளது] 1985 [விலை ரூ. 2-50

முதல் பதிப்பு : 1973
இரண்டாம் பதிப்பு: 1985

சுப்பிரமணிய அருட்டிரு சதாசிவ இராமசாமிப் புலவர்

(1907)

கிடைக்குமிடம் :

தவத்திரு மு. கோ. கிருஷ்ணசாமி சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ பாலசுவாமிகள் மடம்

கரந்தை, தஞ்சை - 613 008

இரண்டாம் பதிப்பு 1985

[உரிமையுள்ளது]

# ஸ்ரீ பாலசுவாமிகள் வரலாற்றுச் சுருக்கம்

விலை ரூ. 2-50

ஜெமினி அச்சகம், தஞ்சாவூர்-9.

# பதிப்புரை

ஸ்ரீ பால்சுவாமிகளவர்கள் மகா சமாதியடைந்து 104 ஆண்டுகளாகிவிட்டன. ஆயினுஞ் சுவாமிகளுடைய வரலாறு இதுவரையிலும் வெளிவராமற் போய்விட்டது. எனினும் ஸ்ரீ பால்சுவாமிகள் செய்த அற்புதங்கள் பலவிடங்களினும் செவிவழிச் செய்தியாக வழங்கிக்கொண்டிருந்தன. அச்செய்திகளையெல்லாந் தொகுத்து நூலாக வெளியிடவேண்டுமென்று பல்லாண்டுகளாக எண்ணிக்கொண்டிருந்தும் அவ்வெண்ணம் இப்பொழுது தான் ஓர் அளவு நிறைவேறுகிறது. இந்நூலைப் படிப்பவர்கள் ஸ்ரீ பாற்சுவாமிகளின் அருட்டன்மையை உணர்ந்து பக்தி செய்து பலன்பெறுவார்கள் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. எங்களுடைய விருப்பப்படி இந்நூலை எழுதித்தந்த கருப்பக்கிளர் சுப்பிரமணிய அருட்டிரு சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கட்கு எங்கள் நன்றி உரியதாகின்றது. இவ்வரலாற்றை எழுதி முடிப்பதற்குச் செய்திகள் உதவிய அன்பர்கட்கும் விரைவில் நன்முறையில் அச்சிட்டுக்கொடுத்த தஞ்சை ஜெமினி அச்சகத்தார்கட்கும் ஸ்ரீ பால்சுவாமிகளின் திருவருள் பூரணமாக அமைவதாக.

ஸ்ரீ பால்சாமி மடம்
கரந்தை : தஞ்சை-8
23—11—1985

இங்ஙனம்
மு. கோ. கிருஷ்ணசாமி சுவாமி

# முகவுரை

தஞ்சாவூர்க் கருந்திட்டைக்குடியாகிய கரந்தையம் பதியில் தவத்திரு நாராயண ஞானதேசிக சுவாமிகள், பாலைய ஞானதேசிக சுவாமிகள், பாலைய சுவாமிகள், பாபநாசம் சுவாமிகள் எனப் பெயர்கள் வழங்கப் பெறும் ஸ்ரீ பால் சுவாமிகளின் சமாதியாலய மடாலயம் பூசனையாதிகளாற் சிறப்புற்று விளங்கி வருவது யாவரும் அறிந்ததேயாம். இத்தகைய பால் சுவாமிகளின் மடாலயத்திற்குத் தலைவராக மகா. கோவிந்தசுவாமிகளாகிய தமது சீடரை நியமனஞ் செய்யவேண்டுமென்று கோயிலூர்க் குருபீடாதிபதியான தவத்திரு மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் அந்நாளில் பால் சுவாமிகள் மடாலயத் தலைவராக இருந்த தவத்திரு, வீரசேகர கிருஷ்ண சுவாமிகளிடம் தெரிவித்தார்கள். அதன்படி ஷை கிருஷ்ண சுவாமிகள் மகா.கோவிந்தசுவாமியவர்களைச் சித்திரபானு வருடம் ஆவணி மாதம் (ஆங்கிலம் 1942 செப்டம்பர்) பால்சுவாமிகள் மடத்தின் தலைவராக நியமனஞ்செய்தார்கள். இவ்வாறு மேற்படி தவத்திரு பால்சுவாமிகள் மடாலயத்திற்குத் தலைவராக இருந்த தவத்திரு மகா கோவிந்தசாமியவர்கள் தாம் தலைவராக இருந்த காலத்தில் பால் சுவாமிகளின் வரலாற்றையும் தோத்திரப் பாடல்களையும் அச்சியற்றி வெளியிட எண்ணங்கொண்டு பால்சுவாமிகளின் வரலாற்றைப் பூண்டி உக்கடை முதலிய ஊர்களில் இருந்த அன்பர்களிடம் உசாவிக் குறிப்புக்கள் எடுத்துக்கொண்டிருந்தார்கள், பிறகு சர்வதாரியாண்டு ஆவணித்திங்கள் (ஆங்கிலம்

1948 செப்டம்பர்) தவத்திரு மகா. கோவிந்த சுவாமிகள் சித்தூர் மாவட்டத்திலுள்ள ஏகாம்பரக்குப்பம் பேட்டை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சமாதியாலய மடாலயத்திற்குத் தலைவராகி அங்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டபடியால் ஸ்ரீ பால் சுவாமிகள் மடாலயத்திற்குத் தமக்கு உதவி மடத் தலைவராகத் தமது சீடரான தவத்திரு வாசுதேவ சுவாமிகளை ஏற்படுத்தித் தாம் குறிப்பெடுத்து வைத்திருந்த பால்சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கத்தை மேற்படி வாசுதேவ சுவாமிகளிடங் கொடுத்துச் "சிறந்த புலவரான கருப்பக்கிளர் சுப்பிரமணிய அருட்டிரு இராமசாமிப் புலவர் அவர்களிடம் இக் குறிப்புக்களைக் கொடுத்து அவர்கள் விசாரித்தறிந்தவைகளையுஞ் சேர்த்து எழுதித்தரச் செய்து அச்சியற்றி வெளியிட வேண்டும்" எனத் தெரிவித்துவிட்டு மேற்படி ஏகாம்பரக்குப்பம்பேட்டை மடாலயத்திற்குச் சென்றனர். அதன் பிறகு மேற்படி வாசுதேவ சுவாமிகள் பால் சுவாமிகள் வரலாற்றுக் குறிப்புக்களை என்னிடங் கொடுத்ததோடு தாம் கேட்டறிந்திருந்த சில செய்திகளையும் என்னிடங் கூறி மேலும் அறியக் கூடிய செய்திகளையும் அறிந்து வரலாற்றை எழுதித்தர வேண்டும் என்றனர். அடியேனும் எழுதித் தருவதாகக் கூறிக் குறிப்புக்களைப் பெற்றுக் கொண்டு சென்றேன். பிறகு வாசுதேவ சுவாமிகள் விதேக முக்தியடைந்தனர். ஸ்ரீ பால்சுவாமிகள் மடாலயத்திற்குத் தலைவரை நியமனஞ் செய்யும் உரிமையுள்ள தவத்திரு மகா கோவிந்தசுவாமியவர்கள் சென்னை வியாசர்பாடி தவத்திரு கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் மடாலயத்தின் சங்க மூர்த்தியாகவிருந்த தவத்திரு

முக்தாநந்த சுவாமிகட்கும் தமக்கும் சீடராயமைந்த தவத்திரு கிருட்டிண சுவாமிகளைத் தவத்திரு பால் சுவாமிகள் மடாலயத்திற்குத் தலைவராக 1960ல் நியமனஞ் செய்தார்கள். இவ்வாறு தற்காலத்தில் மடாலயத் தலைவராக உள்ள தவத்திரு மு. கோ. கிருஷ்ணசாமி சுவாமியவர்கள் அடியேனிடம் "தவத்திரு பால்சுவாமிகளின் வரலாற்றை எழுதித் தந்தால் உடனே அச்சிட்டுவிடுகிறேன்" என்று கூறி ஊக்கமூட்டினார்கள். அடியேன் தவத்திரு பால்சுவாமிகளின் வரலாற்றுக் குறிப்புக்களைப் பெற்று ஏறக்குறையப் பதினைந்தாண்டுகளாகிவிட்டன. அடியேன் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு நூல்கள் எழுதிக் கொடுக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தபடியாலும் அவ்வேலையும் அளவு கடந்ததாக இருந்தபடியாலும் எழுதாமலே வைத்திருந்த குறிப்புக்களை உடனே எழுதிக் கொடுத்து வெளியிடச் செய்தல் வேண்டும் இன்றேல் இவ்வரலாறு எழுதப்படாமலே மறைந்து போகக் கூடும் என்று அஞ்சி இப்பொழுது ஒருவாறு எழுதி முடித்தேன். ஒரு பெரிய மகானுடைய வரலாற்றை எழுதுந் தகுதி நமக்குண்டா? ஏதுந் தவறு நேர்ந்துவிடக் கூடாதே என்னும் எண்ணமும் என்னுள்ளத்தில் இருந்தது இதுவரையில் எழுதாமலிருந்ததற்கு ஒரு காரணமாகும். பால்சுவாமிகளின் அற்புதங்கள் அனைத்தும் இதிற் சேர்ந்துவிடவில்லை. எனக்குக் கிடைத்தவைகளுங் கேட்டறிந்தனவுமாகிய ஒரு சில செய்திகளே இதனில் அமைந்துள்ளன. ஸ்ரீ பால்சுவாமிகளின் அற்புதச் செய்திகளை அறிந்துள்ள அன்பர்கள் அச்செய்திகளைப் பற்றிக் குறிப்புக்கள் அனுப்புவார்களா

யின் மறு பதிப்பிற் சேர்த்துவிடலாம். துறவுநிலைக்கோர் எடுத்துக்காட்டாக விளங்குபவர்களும் மெய்யறிவு நூல்களை நன்கு கற்றுணர்ந்தவர்களும் நன்னிலம் தாண்டவராய சுவாமிகளின் ஆலயத் திருப்பணியை முடித்தவர்களும் அடியேனிடத்தில் அன்புடையவர்களும் ஆகிய தவத்திரு மகா. கோவிந்தசுவாமிகளவர்கள் இந்நூலைச் சரிபார்த்துத் தந்ததுடன் அணிந்துரையும் எழுதியுள்ளார்கள். அவர்கட்கு அடியேனுடைய வணக்கம். இந்நூலை வெளியிடுவதில் ஊக்கங்காட்டிய தவத்திரு மு. கோ. கிருட்டிணசாமி சுவாமியவர்கள் எல்லா நல்லியல்புகளும் நன்கமையப் பெற்றவர்கள்; இவர்கட்கு அன்பர்கள் நன்றி செலுத்துவதோடு வரலாற்றை வாசித்துணர்ந்து தவத்திரு பால்சுவாமிகளின் திருவருளுக்கும் உரியவர்களாவார்களாக!

தஞ்சை<br>16—4—73

இங்ஙனம்<br>**சு. அ. இராமசாமிப் புலவர்**


# அணிந்துரை

இறைவன் திருவருள் பெற்று விளங்கும் ஞானிகளின் வரலாறுகளை வாசித்து அவர்களிடம் பக்தி சிரத்தை பூண்டு வணங்கி வருதலால் அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் நால்வகைப் பயன்களையும் பெறலாம் என்பது ஆன்ருேர்களின் திருவாக்கு. அவ்வாறு இறைவன் திருவருள் பெற்று விளங்கும் ஞானிகளில் தஞ்சை கரந்தையம்பதியில் சமாதியாலயங்கொண்டு, அருளாட்சி புரியும் ஸ்ரீ பாலைய ஞான தேசிக சுவாமிகளவர்கள் சிறந்தவர்களாவார்கள். அவர்களது வரலாற்றைச் சுப்பிரமணிய அருட்டிரு இராமசாமிப்புலவர் அவர்கள் தாம் அறிந்த வரையிற் சிறந்த முறையில் எழுதியுள்ளார்கள். புலவர் அவர்கள் இலக்கண இலக்கியங்களினும் வரலாறு முதலியவை எழுதுவதினும் மிகவும் திறமை பெற்றவர்கள் என்பது பலரும் அறிந்ததேயாம். ஆகவே புலவரவர்கள் எழுதிய வரலாறு யாவராலும் பாராட்டுதற்குரியதாக அமைந்துளது.

இவ் வரலாற்றைச் சிரத்தையுடன் அச்சியற்றி வெளியீடு செய்யும் பாலையசுவாமிகள் மடாலயத் தலைவர் அன்புள்ள மு. கோ. கிருட்டிணசாமி சுவாமிகளின் முயற்சி பலருக்கும் பலனளிப்பதாயிருத்தலின் பாராட்டுதற்குரியதேயாம். அன்பர்கள் ஸ்ரீ பாலைய சுவாமிகளின் வரலாற்றையறிந்து போற்றித் திருவருள் பெற்று இனிது வாழ்வார்களாக !

கொப்பமாபுரி
16—4—1973

இங்ஙனம்
மகா. கோவிந்தசாமி சுவாமி



ஸ்ரீ பால் சுவாமிகள்

உ

# ஸ்ரீ பாலசுவாமிகள் வரலாற்றுச் சுருக்கம்

## காப்பு

சீர்திகழும் நாரணப்பேர்ச் செய்யதிருப் பாற்சாமி
ஏர்திகழும் நல்வரலா றீங்குரைக்கப் — பார்திகழும்
ஐங்கரனுஞ் சங்கரனும் அம்பிகையுஞ் சண்முகனும்
இங்கருளைச் செய்வார் இனிது.

## நூல்

**நாடு :**

உலகினிற் புகழ் சேர்ந்தென்றும் இலங்குவது நமது பரதகண்டமேயாம். இப்பரத கண்டத்துள்ளுந் தமிழ் நாடு சீருஞ் சிறப்பும் மிக்கதாம் இத்தமிழ் நாட்டுள்ளுஞ் "சோழ வளநாடு சோறுடைத்தென" ஆன்றோர்களால் வியந்தோதப் பெற்ற சோழமண்டலம் மிகுந்த புகழுடையதாம். இச்சோழமண்டலம் தேவாரம் பெற்ற பல சிலப்பதிகளைத் தன்னிடத்தே கொண்டுள்ளதன்றி மெய்ஞ்ஞானச் செல்வர்கள் பலர் தோன்றுவதற்கும் ஏற்றதாக அமைந்தது. இச் சோழமண்டலத்திற் சிறந்து விளங்குந் தஞ்சை மாவட்டம் மக்களுடைய பசிப் பிணியைப் போக்கும் நெல் விளைச்சலை மிகுதியாகத் தன்னிடத்தே கொண்டிருத்தலின் நெற் களஞ்சியமாகவும் புகழப்பெறுகிறது.

**ஊரும் பிறப்பும் :**

இத்தகைய பெருமை வாய்ந்த தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம் என்னும் ஊர் ஒன்று உள்ளது. அவ்வூரில் ஏறக்குறைய நூற்றெண்பத்தைந்தாண்டுகட்கு

முன்பு பூவைசியர் மரபில் மேளத் தொழிலுடையோர் குடும்பத்தில் நாராயணசாமிப் பிள்ளையெனப் பிள்ளைத் திருநாமம் பெற்ற ஸ்ரீ பாற் சுவாமிகள் தோன்றி னார்கள். தொடக்கப் பள்ளியிற் சிறிது காலம் படித்தார் கள். பெற்றோர்கள் இவர் மேள சம்பந்தமான தொழி லில் ஈடுபடுவதையே விரும்பினார்கள். இப்பெரியார் பழம் பிறப்பிற் செய்துள்ள தவக் குறைவை நிறை வேற்ற இவ்வுலகில் தோன்றியவர். இத்தகைய பெரி யோர்கள் இத்தகைய குடியில் தோன்றுவரோவெனின் நல்லார் பிறக்குங் குடியைக் கண்டார் யார்? தவக் குறையை நிறைவேற்ற வந்த இவருடைய மனம் உலகப் பற்றற்ற நிலையில் இறைவனைப் பற்றி நின்றது. மிகு இளம் பருவத்திலேயே புராணச் சொற்பொழிவுகள் ஆன்மஞானச் சொற்பொழிவுகள் முதலிய சீரிய சொற் பொழிவுகள் நிகழுமிடங்கட்குச் சென்று கருத்துடன் கேட்பதை ஸ்ரீ பாற்சுவாமிகள் முதன்மையான செய லாக மேற்கொண்டிருந்தார்கள். சுவாமிகளுடைய ஆன்ம ஞான முயற்சி நாளும் வளர்ந்துகொண்டேயிருந்தது.

**துறவியாதல் :**

சுவாமிகள் தம்முடைய வழக்கப்படி தஞ்சையில் நடந்த ஆன்மஞானச் சொற்பொழிவு ஒன்றுக்குப் போய்க் கேட்டுவிட்டு ஊருக்கு வந்தார்கள். மறுநாள் மேளக் கச்சேரிக்குச் சென்றார்கள். அப்பொழுது சுவாமி கள் மேளக் கச்சேரியில் தாளம் அடிப்பதைத் தம்மு டைய வேலையாகக் கொண்டிருந்தார்கள். மேளக் கச்சேரிக்கு தாளம் அடிக்கச் சென்றவர்களுடைய உள்ளம் தாளம் அடிப்பதில் சரியாகப் பதியவில்லை. முதல் நாள் கேட்ட சொற்பொழிவையே எண்ணிப்

பார்த்து ஆன்ம நிட்டையிற் பதித்திருந்தபடியால் தாளத்தை மேளத்துக்குச் சரியாக அடிக்கவில்லை. நாதசுரம் வாசிப்போர், "உனக்கு அறிவில்லையா? என்னமோ எண்ணமிட்டுக் கொண்டு தாளமடிக்கிறாயே?" என்று இகழ்ந்து பேசினார்கள். நாராயண சுவாமிகளாகிய நம்முடைய பாற்சுவாமிகள், "நாதசுரத்திற்குச் சாதகமாக ஒத்து ஊதவேண்டிய ஒத்துக்குழல் ஊதுகிறேன்" என்று கூறி ஒத்துக்குழல் ஊதினார்கள். அப்போதும் ஆன்ம நிட்டையில் மனம் பற்றியபடியால் ஒத்துக் குழலைச் சரியாக ஊதவில்லை. நாதசுரக்காரர்கள் இகழ்ந்து பேசினார்கள். சுவாமிகள் அவர்கள் இகழ்ந்து பேசியதைக்கூட உணரவில்லை. ஆன்ம நிட்டையிற் படிந்த உள்ளம் வேறொன்றைப் பற்றுமோ? சிறிது நேரத்தில் சுவாமிகள் நிட்டையில் ஆழ்ந்து விட்டார்கள். நாதசுரம் வாயை விட்டு நழுவி மார்பில் விழுந்தது. நாதசுரம் வாயைவிட்டு நழுவி மார்பில் விழுந்தபின் நாதசுரக்காரர்கள் வியந்து பாராட்டும் அளவுக்கு ஒத்துக்குழல் மிகவுஞ் சரியான முறையில் ஊதிக்கொண்டேயிருந்தது. இந்த வியக்கத்தக்க அற்புத நிகழ்ச்சியைக் கண்டு நாதசுரம் வாசிப்போரும் மற்றவர்களும் மிகுந்த வியப்புந் திகைப்பும் அடைந்தார்கள். நாதசுரக்காரர்கள் தாங்கள் முன்பு இகழ்ந்து பேசியதற்காக உள்ளம் வருந்தினார்கள். அவர்கட்கு மிகுந்த அச்சம் உண்டாகிவிட்டது. மேளதாளங்களையும் வாத்தியங்களையும் நிறுத்திவிட்டு, ஒத்துக்குழல் தானாகவே வாசிக்கும் புதுமையைப் பார்த்துக் கேட்டுக்கொண்டேயிருந்தார்கள். இப்புதுமையைக் கேள்விப்பட்டு ஊர்வாழ் மக்களும் வந்து கூடிவிட்டார்கள். இவ்வாறு மூன்று மணி நேரம் (சாம நாழிகை; ஆன்ம நிட்டையில் கண்களை மூடியிருந்

தார்கள். அதுவரை ஒத்துக்குழல் தொடர்ந்து ஊதிக் கொண்டேயிருந்தது. பிறகு ஸ்ரீபாற்சுவாமிகள் கண் விழிக்கவே ஒத்து ஊது குழல் ஊதுவதும் நின்றது. உடனே நாதசுரக்காரர்கள் ஸ்ரீபாற்சுவாமிகளின் திருவடிகளில் தலையை வைத்து வணங்கினர். தாங்கள் நல்லறிவில்லாமல் இகழ்ந்து பேசியதை மன்னிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். ஊர்வாழ் மக்களும் ஸ்ரீபாற்சுவாமிகளைப் போற்றிப் பாராட்டி வணங்கினார்கள். சுவாமிகளைத் தங்களுடைய குருவாகக் கொண்டார்கள்.

## அருளுரை பெறுதல்

ஸ்ரீ பாற்சுவாமிகள் தம்மைப் பிறர் தூற்றியபோதும் போற்றியபோதும் அவைகளை ஒரு பொருட்படுத்தவில்லை. மெய்ஞ்ஞானச் செல்வர்களுடைய நிலை இவ்வாறுதான் இருக்கும். இதன் பிறகு ஸ்ரீ பாற்சுவாமிகள் தம்முடைய வீட்டிற்குச் செல்லவில்லை. திருக்கோவில்கட்குச் சென்று இறைவழிபாடு செய்தல், நிட்டையிருத்தல் முதலிய செயல்களை மேற்கொண்டு பல விடங்களினுஞ் சுற்றித் திரிந்தார்கள். பொருந்திவாழ் இடம் ஒன்று உளதாயின் பற்றும் பொருந்திடுமன்றோ? உணவைப் பற்றிய எண்ணமேயில்லாமல் சில நாட்கள் வரை நிட்டையில் இருந்து விடுதலும் உண்டு. பிறகு ஸ்ரீ பாற்சுவாமிகள் தகுந்த குருவையடைந்து தாம் அறிந்த ஆன்ம நிட்டையின் மேலான நிர்விகல்ப சமாதிக்குரிய அருளுரையைப் பெற வேண்டுமென்பதைத் தம்முடைய நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். இந்நோக்கத்தோடு பல சிவப் பதிகட்கும் பயணஞ் சென்று இறைவழி

பாடு செய்துகொண்டிருந்தார்கள். "மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர், வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்பது தாயுமான சுவாமிகளின் திருவாக்கு. நமது சுவாமிகள் ஒருநாள் திருவலஞ்சுழி என்னுந் தலத்தையடைந்து இறைவழிபாடு செய்துகொண்டு அப்பதியின் புகழ் பெற்ற மூர்த்தியாகிய பிள்ளையாரின் திருமுன்பு அமர்ந்து தியானஞ் செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது *துறவியொருவர் நீண்ட சடாமுடியுடனுங் காவியுடை யோடும் இறைவழிபாட்டிற்கு வந்தார். அத்துறவியை நமது நாராயணசுவாமிகள் என்னும் ஸ்ரீபாற்சுவாமிகள் முன்னரே அறிவார். அத்துறவியைக் கண்டதும் நமது சுவாமிகள், "சுவாமிகளே! அடியேன் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் பல நாட்களாயின். இனி இல்லத்துக்குச் செல்வதாக எண்ணமில்லை. துறவியாகவே வசிக்க விரும்புகிறேன். ஆகவே அடியேனுக்குக் காவியுடை தந்து நிர்விகற்ப சமாதிக்கு உரிய அருளுரை கூறியருள வேண்டுகிறேன்" என்று கூறிப் பணிந்தார். அப்பெரி யார் "அன்பனே! நீ உன்னை உணர்ந்து நிர்விகற்ப சமாதியடைதற்குரிய உயரிய மறைமொழியை உனக்கு உரைத்தருளுகிறேன். கல்லாடை கட்டினால்தான் துறவி இல்லாவிட்டால் துறவியல்ல என்று எண்ணிக்கொண் டிருக்க வேண்டாம். பற்றுக்கள் யாவற்றையும் துறத் தலே துறவு. வெளிப் பொருள்களை மட்டும் துறந்து விட்டால் போதாது, உள்ளத்தில் எத்தகைய பற்று மில்லாமல் துறக்கும் உயர்ந்த துறவைத்தான் பட்டினத் தடிகளும் பாராட்டியிருக்கிறார்" என்று கூறிச் சுவாமி

* இப்பெரியாருடைய பெயர் மறந்துவிட்டது

கட்குப் பிரமோபதேசஞ் செய்து ஆன்ம நிட்டையின் மேலான நிர்விகற்ப சமாதி நிலையை உணர்த்திச் சென்றார். அன்றுமுதல் சுவாமிகள் தம்மையறியாமலே நிர்விகற்ப சமாதி நிட்டையில் அமர்ந்து விடுவதுண்டு.

## எண்வகையாற்றலையும் அடைதல்

இதன் பிறகு சுவாமிகட்கு எண்வகைச் சித்திகளும் கைவரலாயின. அவை அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பனவாம்.

1. அணிமா = அணுவைப்போலத் தேகத்தைச் சூக்குமம் ஆக்குதல்
2. மகிமா = பெரியதாகத் தேகத்தை ஆக்குதல்.
3. கரிமா = கனமுடையதாக ஆக்குதல்.
4. இலகிமா = இலகுத்துவமுடையதாக ஆக்குதல்.
5. பிராப்தி = நினைத்த பொருள் தம் முன்னிலையில் வந்து அடைதல்.
6. பிராகாமியம் = நினைத்த ஊர்களுக்கு நினைத்த நேரத்தில் செல்லுதல்.
7. ஈசத்துவம் = நினைத்த பொருள்களை உண்டாக்கிக் காத்து அழித்தல்.
8. வசித்துவம் = பூத பௌதிகங்களைத் தம் சுவாதீனமாகச் செய்தல்.

மேற்படி சித்திகள் ஈசுரனுடைய அருளால் கிடைப்பனவாம். இத்தகைய எண்வகைச் சித்திகளும் கைவந்த

தீர்யினும் நமது சுவாமிகள் அச்சித்திகளில் இரண்டொன்றைப் பயன்படுத்தியதைத் தவிர மற்றவைகளைப் பயன்படுத்தவில்லை.

## ஆகாய கமனம்

ஆகாய கமனம் என்றால் விண்வழியே செல்லுதல் என்று பொருள். நமது சுவாமிகள் ஓரிடத்தில் ஆடையை மடித்து அதன்மீது நிட்டையில் அமர்வார். நிட்டை முடிவில் கண்திறக்கும் போது எந்த ஊரில் எந்த இடத்தில் இருக்கவேண்டுமென்று உள்ளத்தில் எண்ணுகிறார்களோ அந்த இடத்தில் இருப்பார்கள்; இவ்வாறு தமிழ் நாடு முழுவதுஞ் சஞ்சரித்ததாக அன்பர்கள் கூறுகிறார்கள். மிக அதிகமாகச் சஞ்சரித்த இடம் தஞ்சை மாவட்டமே. இதுவே பிராகாமியமாம்.

## நீர்ப்பெருக்கில் நிட்டை

சுவாமிகள் ஒருநாள் வடவாற்றுக் கரையில் ஆற்றுக்கு உட்புறமாக ஓர் அரசமரத்தின் அடியில் நிட்டையில் அமர்ந்திருந்தனர். கால் ஆறு அளவுக்கே ஓடிக் கொண்டிருந்த நீர் சிறிது சிறிதாக அதிகரித்து முழு ஆருக ஓடத்தொடங்கிச் சுவாமிகளை இழுத்துச் சென்றது. நிட்டையில் அமர்ந்திருந்த சுவாமிகள் நீரிற் சாயவோ நனையவோ இல்லை. நிட்டையில் இருந்தபடியே நீர்ப் பெருக்கிற் சென்றுகொண்டிருந்தனர். இதனைக் கண்டவர்கள் சுவாமிகளின் கதி யாதாமோ என்று அஞ்சினார்களாயினுஞ் சுவாமிகளுடைய பெருமையை நன்கு உணர்ந்திருந்தபடியால் எத்தகைய ஆபத்துஞ் சுவாமிகட்கு ஏற்படாதென்று மனந்தெளிந்தார்கள். மறுநாள்

சுவாமிகள் வழக்கமாக இருக்குமிடத்திற்குப் போய்ப் பார்த்தார்கள். அங்கு சுவாமிகள் வழக்கம்போல் அமர்ந் திருத்தலைக் கண்டு வணங்கிச் சென்றார்கள்.

## குலச்சிறுமை பேசியவர்கள்

ஒருநாள் சுவாமிகள் பொது இடம் ஒன்றில் அமர்ந்து நிட்டையில் இருந்தார்கள். அப்பொழுது அவ்வழியே சென்றவர்களில் ஒருவன் மற்றவனைப் பார்த்து, "இந்தச் சாமியாரை உனக்கு தெரியுமா?" என்று கேட்டான். அதற்கு ஸ்ரீ பாற்சுவாமிகளின் மகிமை அறியாத மற்றவன் சிறிதும் நாவடக்கமில்லா மல் "அவரா! தெரியுமே; பாபநாசம் மேளக்காரச் சாமியார்; தாளமடிக்கவும் ஊதவும் தெரியாதபடி யால் சாமியாராகிவிட்டார்" என்றான். இவர்கள் இரு வரும் வழிநெடுகப் பேசிக்கொண்டு சென்றார்கள். அடுத்த ஊரிற் சென்று மற்றவர்களோடு பேசத் தொடங்கியபோது அவர்களாற் சரிவரப் பேசமுடியாமற் போய்விட்டது. திக்கித்திக்கிப் பேசினார்கள். நாழிகைக்கு ஓர் எழுத்தே வாயிலிருந்து வெளிப்பட்டது. அவர்கள் மிகுந்த அச்சத்தையடைந்தார்கள். வழியில் இருந்த பெரியாரை இகழ்ச்சியாகப் பேசியபடியினால் இவ்வாறு ஏற்பட்டது என்பதை அவர்கள் ஒருவாறு ஊகித்து உணர்ந்துகொண்டார்கள்.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்பது தமிழ் மறையன்றோ? அவர்கள் சுவாமி களிடஞ் சென்று எதுவும் வேண்டிக்கொள்ளவில்லை. தங்கள் மனதுக்குள்ளேயே தங்கள் குற்றத்தைப்

பொறுத்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். எல்லாமுணரத்தக்க பெரியோர்கட்கு இவர்களுடைய வேண்டுகோள் தெரியாமற் போகுமோ? ஐந்தாறு நாட்களில் வழக்கம்போல் பேசுந் திறத்தையடைந்தார்கள்.

## கள்ளர்கள் கயமை

ஒருநாள் சுவாமிகள் பாழடைந்த ஒரு கோவில் முகப்பில் அமர்ந்து நிட்டை கூடியிருந்தார்கள். அப்பொழுது நண்பகல் நேரம். அவ்வழியே மூன்று கள்ளர்கள் சென்றார்கள். அவர்கள் நமது சுவாமிகளை முன்பின் அறிந்தவர்களல்லர். அவர்களில் ஒருவன் "இதோ ஒரு சாமியார் உட்கார்ந்திருக்கிறார்" என்றான். சுவாமிகள் எப்பொழுதும் நல்ல வெண்மையான உடையையே உடுத்துவது வழக்கம். அவ்வழக்கப்படி அப்பொழுது வெண்மையான ஆடையையே அணிந்திருந்தார். மற்றொருவன் "அவருடைய துணி எவ்வளவு வெண்மையாக இருக்கிறது பார்" என்றான். மூன்றாமவனோ "இத்தகைய வெள்ளை வேட்டி கட்டியிருக்கும் இச்சாமியாரிடத்தில் பணங்காசு இல்லாமல் இருக்காது. ஏதாவது இருக்கும், பறித்துக்கொண்டு சென்றால் மாலையில் தண்ணீர் (கள்) குடிப்பதற்காவது பயன்படும்" என்றான். அச்சமயம் அப்பக்கத்தில் மக்கள் நடமாட்டமும் இல்லை. மூவருஞ் சுவாமிகளிடஞ் சென்று "ஓய் சாமியாரே ; எந்த ஊர்? எவ்வளவு பணம் வைத்திருக்கிறீர் ?" என்று கேட்டார்கள். சுவாமிகளிடமிருந்து எத்தகைய மறுமொழியும் வரவில்லை. சுவாமிகள் கண்ணைத் திறந்து

பார்க்கவும் இல்லை. ஒருவன் சுவாமிகளுடைய மடியிற் கையை போட்டான். சுவாமிகள் எப்பொழுதும் திருநீற்றுப் பை மடியில் வைத்திருப்பது வழக்கம். அத்தப் பை கையில் அகப்பட்டது. எடுத்து அவிழ்த்துக் கீழே கொட்டினன். எதிர் பார்த்தபடி வெள்ளி ரூபாயோ காசோ பையிலிருந்து அகப்படவில்லை. திருநீற்றைக் கீழே கொட்டி நன்ருகப் பார்த்துவிட்டு "நீயே வைத்துக்கொள்" என்று சொல்லிப் பையை மடியிலே வீசியெறிந்தான். மூவரும் சிறிது தொலை சென்ருர்கள். மூவருடைய கண்பார்வையும் நன்கு தெரியவில்லை. இருளில் நடப்பதுபோல் நடந்து சென்று ஒரு சப்பாத்தி புதரின் மேல் ஏறி அலறிக்கொண்டு கீழே விழுந்தார்கள். உடல் முழுவதுஞ் சப்பாத்தி முள் ஏறிவிட்டது. அப்பொழுது அவ்வழியே சென்ற சிலர் இம் மூவருஞ் சப்பாத்திப் புதரில் தடுமாறிக்கொண்டு கிடப்பதைப் பார்த்துப் "பட்டப் பகலிலேயே சப்பாத்தி புதரில் போய் விழுகிறீர்களே, உங்களுக்குக் கண் தெரியவில்லையா ?" என்று கூறித் தூக்கிப் பக்கத்திலே விட்டு விட்டுச் சென்ருர்கள். அக்கள்ளர்கள் தட்டுத்தடுமாறிக் கஷ்டப்பட்டு வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார்கள். நிகழ்ந்ததை இரண்டொருவரிடங் கூறினர்கள். அதுமுதல் களவுத் தொழிலை அடியோடு விட்டுவிட்டுத் திருந்தி நல்லவர்களானர்கள்.

**ஆற்றைக் கடந்தது**

ஒரு நாள் சுவாமிகள் கூடலூர் குளமங்கலம் என்னுமிடத்துக்குச் சென்றுகொண்டிருந்தனர். வெண்ணுறு என இந்நாளில் வழங்கும் வீணன் ஆற்றில் ஆறு

நிறைய வெள்ளம் போய்க்கொண்டிருந்தது. ஓடம் ஏறி ஞல்தான் மறுகரை போய்ச் சேரலாம். சுவாமிகள் ஓடம் விடுபவனிடம் தம்மையும் ஓடத்தில் ஏற்றி அக்கரைக்குக் கொண்டுபோய் விடுமாறு கூறினர். அவ்வோடக்காரன் சுவாமிகளின் பெருமையை உணரான்; எல்லாரையும் போல் காசு கொடுத்தால்தான் ஓடத்தில் ஏற்ற முடியுமென்று கூறிவிட்டான். பல மக்களை ஏற்றிக்கொண்டு ஓடம் மறுகரைக்குப் போய்ச் சேர்ந்தது. எல்லோரும் ஓடத்தை விட்டு இறங்கிக் கரையேறி வழி நடக்கத் தொடங்கினர். எல்லோருக்கும் முன்னே சிறிது தொலையில் சுவாமிகள் சென்று கொண்டிருந்ததை ஓடக்காரனுக்குச் சிலர் காட்டினர். சுவாமிகள் முன்னலே சென்றுகொண்டிருந்ததை மற்றவர்களுங் கண்டார்கள். சுவாமிகள் எவ்வாறு ஆற்றைக் கடந்தனர் என்பது யாருக்கும் விளங்காத புதிராக இருந்தது. சுவாமிகள் அனைவரும் வியக்கத்தக்க அற்புத சக்தி வாய்ந்தவர் என்பது அனைவருக்கும் விளங்கியது. ஓடக்காரன் தான் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். மற்றவர்களுஞ் சுவாமிகளைப் பணிந்து போற்றிப் பாராட்டினர்கள். பிறவிக்கடலையே கடந்துகொண்டிருக்கும் ஒரு பெரியாருக்கு ஒரு சிற்றாற்றைக் கடப்பது பெரிய காரியமாகுமோ? எண்வகை யாற்றலில் ஒன்றைப் பயன்படுத்தலாமன்றோ? ஆற்றைக் கடக்க முடியாதவர் போன்று ஓடக்காரனை யிரந்தது அவனுக்கும் பிறருக்கும் தெய்வ சக்தியை உணர்த்தி நல்லறிவு கற்பித்தற் பொருட்டேயாம்.

**பாலசாமி :**

தில்லை மரம் என்பது மர வகைகளில் ஒன்று. இந்த மரத்தின் பால் யோகிகள் தவிர மற்றவர்கள் உடலிற் பட்டால் அந்த இடம் வெந்து போகுமாம். இம்மரம் அந்நாளில் வேதாரண்யம் சமீபமுள்ள கோடியக்காட்டில் மிகுதியாக இருந்ததாம். ஸ்ரீ கோரக்க சித்தர் இயற்றிய மலைவாகடம் என்னும் நூலிலும் கருவூரார் வாதகாவியம் 700-என்னும் நூலிலும் ஆன்ம நிட்டை சமாதியோகம் புரிகிறவர்கள் தில்லை விருட்சத்தின் பாலைச்சாஸ்திரத்தில் கூறிய விதிப்படி புசிப்பதால், காயசித்தியும் (அதாவது சரீரத்தில் எந்தவிதமான வியாதியும் வராமல் சரீரம் திடமாகும் சித்தியும்) அதனால் நெடுங் காலம் ஆன்ம நிட்டை சமாதியோகத்தில் அமர்ந்திருக் கும் நிலையும் ஏற்படும் என்று கூறியிருக்கின்றதை ஸ்ரீ பால்சுவாமிகள் அறிந்தவர்களாதலால் அந்தப்படி தில்லை மரத்தின் பாலை மேற்கூறிய கோடியக் காட்டிற்கு நேரில் சென்று கறந்து உண்டு வருவதும், சில சமயம் பக்தர்களைக் கொண்டுவரச்செய்து உண்டுவருவதும் உண்டு. அவ்வாறு தில்லை மரத்தின் பாலை நாள்தோறும் மாலையில் உண்ணுதலை வழக்கமாகக் கொண்டிருந்த தனர் பகற்காலத்தில் தஞ்சையை ஒட்டிய பகுதிகளிற் சுற்றிக்கொண்டிருக்குஞ் சுவாமிகள் மாலையில் கோடியக் காட்டுக்கு நாள்தோறும் போய்விடுவது வழக்கமாம். எவ்வாறு செல்வார்கள் என்பதை முன்னர்க் கூறியுள்ள ஆகாய கமனச் செய்தியால் அறிந்து கொள்ளலாம். சுவாமிகளுடைய பெருமையை உணர்ந்த கோடியக்காட் டன்பர்கள் தில்லம் பாலைக் கறந்து வைத்துக்கொண்டு சுவாமிகளின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருப்

பார்கள். இவ்வாறு தில்லம்பால் சாப்பிட்டபடியால் தான் சுவாமிகட்குப் பால்சுவாமிகள் என்று பெயருண்டாக்கியது. இவ்வாறு அன்றிப் பசுவின் பால் சாப்பிட்டதனுல் அன்று ; சில அன்பர்கள் பசுவின் பாலை மட்டும் உணவாகக் கொண்டிருந்தபடியால் இவ்வாறு பால் சுவாமி என்று பெயருண்டாயிற்றுப் போலும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறுர்கள். கோடியக்கரை அன்பர்கள் வீட்டில் தில்லம்பாலைச் சாப்பிடுஞ் சுவாமிகள் பக்கத்திலுள்ள காட்டில் சென்று நிட்டை செய்துகொண்டிருத்தலும் உண்டு.

## இராமசாமி பாதம்

திருமறைக்காட்டில் இருந்து கோடியக்கரைக்குச் செல்லும் வழியில் ஒரு பெரிய மண்மூட்டு இருக்கிறது. அதற்கு இராமசாமி பாதம் என்று பெயர். இராமபிரான் இலங்கையில் இருந்து அவ்வழியாக வந்தாரென்றும் காலில் படிந்திருந்த மண்ணை உதறியதில் அம்முட்டு உண்டாயிற்றென்றும் அதனுல்தான் இராமசாமி பாதம் என்று அதற்குப் பெயர் என்றும் கூறுவார்கள். நமது சுவாமிகள் ஒரு சமயம் அம்முட்டின் மீது ஏறி நிட்டையில் அமர்ந்துவிட்டனர்; நமது சுவாமிகட்கு தில்லம்பால் அளிக்கும் அன்பர்கள் சுவாமிகள் இங்கிருக்கும் செய்தியைச் சிலரால் உணர்ந்து பாலுடன் அந்த இடத்திற்குச்சென்றனர். அப்பொழுது ஏழு நல்லபாம்புகள் சுவாமிகளைச் சுற்றிப் படமெடுத்து ஆடிக்கொண்டிருந்தன. இதனைக் கண்ட அன்பர்கள் அஞ்சி அவ்விடத்தை விட்டு விரைந்தோடிப் போயினர். தெய்வீகப் பெரியாரைக் காத்து நிற்கும் அப்பாம்புகள் தமக்கு

யாதுந் தீங்கு செய்யமாட்டா என்னும் எண்ணம் அவர்கட்கு உண்டாகவில்லை.

## கடித்த பாம்பு மாண்டது

ஒரு சமயம் சுவாமிகள் பாபநாசம் தாலுகா எடக்குடி வட்டம் சாத்தனூரில் இருந்து அன்பர்கள் சிலரோடு வந்துகொண்டிருந்போது ஸ்ரீ பால் சுவாமிகள் காலில் இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. அன்பர்கள் ஸ்ரீ பாற்சுவாமிகளைப் பார்த்து "காலில் இரத்தம் வருகிறதே என்ன"? என்று கேட்டார்கள். அதற்குச் சுவாமிகள் விண்ணாற்றங்கரையில் ஓரிடத்தைக் குறிப்பிட்டு "அங்குப் போய்ப் பாருங்கள்" என்றார்கள். அன்பர்கள் சென்று பார்த்தனர். ஒரு நல்ல பாம்பு இறந்து கிடந்தது. அப்பாம்பு சுவாமிகளின் காலில் தீண்டியிருக்கிறது அதனால் தான்; இரத்தம் வந்தது என்று அறிந்து கொண்டார்கள். மெஞ்ஞானச் செல்வர்களைக் கடித்த பாம்பு பிழைக்குமோ ? சாமிகளைத் தீண்டியபடியினால்தான் அப்பாம்பு இறந்துபோய்விட்டதென்று அறிந்தார்கள்.

## காசுகள் காணிக்கை

சுவாமிகள் ஒரு நாள் திருவையாறு சென்று ஐயாறப்பர் கோவிலில் கொடிமரத்தின் தென்பக்கமாக அமர்ந்து நிட்டை செய்தனர். காலையில் அமர்ந்தவர் நண்பகற்போது வரை எழும்பவில்லை. கோவிலுக்குச் சென்ற ஓரன்பர் சுவாமிகளின் திருமுன்பு ஓரணா நாணயம் ஒன்றை வைத்துவிட்டுச் சென்றார். நிட்டைபுரியுஞ் சுவாமிகள் திருமுன்பு காசைப் பார்த்தவர்கள் சுவாமி

உ. கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்

கட்குப் பணந்தேவை போலும் என்று எண்ணித் தாமுங் காசுகளைக் காலணா, ஒரணா, இரண்டணா இப்படியாக வைக்க தொடங்கி விட்டனர். உண்மையை உணர்ந்து கொள்ளாமலே ஒருவர் செய்ததைம் பார்த்து விட்டுத் தாமுஞ் செய்வது உலக வழக்க மல்லவா? நண்பகற் போதுக்குள் சுவாமிகளின் திருமுன்பு ஏறக் குறையப் பத்து ரூபாய்வரை குவிந்து விட்டன, அன்று ஏதோ ஒரு சிறப்பு நாள் (விசேடநாள்) ஆகையால் இவ்வளவு தொகை விழுந்துவிட்டது. பொதுவான நாளாக இருந்திருந்தால் இவ்வளவு தொகை விழுந்திருக்க மாட்டாது. சுவாமிகள் திரு முன்பு காசுகள் மிகுதியாகக் குவிந்திருத்தலையுஞ் சுவாமிகளோ உலக நாட்டமே இல்லாமல் இருப்பதை யும் தீயவனான ஒரு மனிதன் கண்டான். யாரும் வராத சமயம் பார்த்து இக் காசுகளை அள்ளிக்கொண்டு போய் விடவேண்டும். சுவாமியாரைப் பற்றிப் பயப்பட வேண்டியதில்லை. அவர் ஆடாமல் அசையாமல் இருக் கிறார் என்று எண்ணினான். ஓரிடத்தில் மறைந்திருந் தான். மக்கள் நடமாட்டம் நின்ற சமயத்தில் அக் காசுகளை அள்ளித் தன் மேல்துண்டில் முடிந்து கொண்டு கோயிலைவிட்டுப் புறப்பட்டான். தன் வீட்டிற்குப் போய்த் தனிமையான இடத்தில் அமர்ந்து காசுகளை அவிழ்த்து எண்ணிப் பார்க்க எண்ணினான். துண்டில் முடிந்திருந்தவை அவிழ்த்துப் பார்த்தான்! என்ன அதிசயம்! அக்காசுகள் முழுவதும் சிறிதும் பெரிதுமான கூழாங்கற்களாக இருந்தன. திடுக்கிட் டான். நாம் பெரியாரை ஏமாற்றிவிட்டதாக எண்ணி னோம். கடவுள் நம்மை ஏமாற்றிவிட்டாரென்று கருதி னான். இச் செய்தியை வெகு நாள் வரை யாரிடமும்

கூறுமலிருந்தான். பிறகு ஒரு நாள் தன் நெருங்கிய நண்பன் ஒருவனிடங் கூறினன். பிறகு இச்செய்தி பலருக்குந் தெரிந்தது.

## தீராத நோய் போக்கல்

சிவகண்மணி என்னும் உருத்திராக்கத்தை மணி என்றும், திருவைந்தெழுத்தை மந்திரம் எனவுங் கூறுவர். தெய்வத்திருவருள் கைவரப்பெற்ற பெரியோர்கள் திருவைந்தெழுத்தை போதித் திருநீற்றைக் கொடுத்தால் நோய்கள் நீங்கும். இதனையே மணிமந்திர ஔடதம் என்பர். சுவாமிகளுடைய தெய்வத்திருவளில் நம் பிக்கையுடையவர்கள் தங்கட்கு நோய் வந்தால் மருத்துவர்களையோ மருத்துவசாலைகளையோ நாடிச் செல்வதில்லை. சுவாமிகளைத் தேடிக் கண்டுபிடித்துத் தங்களுடைய நோய்களைக் கூறி முறையிடுவர். உடனே சுவாமிகள் "உன்னுடைய பிணி தீர்த்து விடும் தீர்ந்து விடும் தீர்ந்து விடும் போ" என்று கூறித் திருநீறளிப்பர். அதன் பிறகு அந்நோய் அவர்களை அண்டுவதில்லை. அவ்வாறு நீறளித்து வயிற்றுவலி, சூலை, கண்டமாலை, வாதம், பித்தம், கிரந்தி முதலிய எண்ணற்ற நோய்களைப் போக்கியருளினர். நோய்களின் மொத்த எண்ணிக்கை நால்லாயிரத்து நானூற்றுநாற்பத்துஎட்டு (4448) இவ்வளவு நோய்கள் இருக்கும்போது மனிதனுக்கு ஏதாவதொரு நோய் வராமலிக்குமா? ஒரு நாள் வயிற்றுவலியால் பெருந்தொல்லைப்பட்ட ஒருவன் மரணத்துன்பம் இவ்வயிற்றுவலித் துன்பத்தைவிடவா பெரிதாக இருக்கப்போகிறது. இன்னுஞ் சிலகாலம் வருந்தி இறப்பதைவிட இப்பொழுதே இறந்து போவது நல்லது என்று முடிவு செய்து வீட்டுக்

கொல்லையிலிருந்த புளியமரம் ஒன்றில் தூக்குப் போட்டுக்கொண்டு சாக எண்ணி ஒரு கயிற்ருேடு மரத்தின் மீது ஏறிஞன். கயிற்ருேடு மரத்தின் மீது இவன் ஏறுவதைப் பார்த்துவிட்ட பக்கத்து வீட்டுக்காரன், "கயிற்றை மரத்தின் மீது கொண்டு போய் என்னப்பா செய்யப்போகிருய்?" என்று கேட்டான். வயிற்றுவலிக்காரன், "எனக்கு அடிக்கடி வயிற்றுவலி வந்து உயிரை வாங்குகிறது. இன்று நானே உயிரை வாங்கி விடுவதென்று முடிவு செய்துவிட்டேன்," என்ருன். இதனைக் கேட்ட பக்கத்து வீட்டுக்காரன் திடுக்கிட்டுப் போஞன். "அடடே அப்படியெல்லாஞ் செய்துவிடாதே; பால்சாமி என்று ஒரு சித்த புருஷர் இருக்கிருர்; அவரிடஞ்சென்று வணங்கித் திருநீறு பெற்ருல் உடனே இந்நோய் நீங்கிவிடும். அப்பெரியார் ஓரிடத்திலும் நிலையாக இருப்பதில்லை. பலவிடங்களிலுஞ் சுற்றிக் கொண்டிருக்கிருர். உன்னை நானே அவரிடம் அழைத்துக்கொண்டு போகிறேன். உடனே புறப்படு" என்று கூறி அவனையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டான். சுவாமிகள் தங்கியிருக்கும்படியான இடங்களையெல்லாம் பார்த்தனர். அன்றும் மறுநாளுஞ் சுவாமிகளை காணமுடியவில்லை. மூன்ருவது நாள் மாலையில் ஒரு பிள்ளையார் கோயில் வாசலில் நிட்டையிலிருக்கக் கண்டனர். இருவரும் வணங்கி நின்றனர். நெடுநேரம்வரையில் யாரையுங் கவனிக்காத சுவாமிகள் அன்று உடனேயே அருட்கண் திறந்து திருவருளேக் கத்தைச் செலுத்தியருளினர். வயிற்றுவலிக்காரனை யழைத்துக்கொண்டு சென்ற பக்கத்து வீட்டுக்காரன்

சுவாமிகளைப் பார்த்துச் "சுவாமி! இவன் வயிற்றுவலியால் தொல்லைப்பட்டுப் புளிமரத்தின் மீது ஏறித் தூக்குப் போட்டுக்கொண்டு உயிர்விட எண்ணினான்; நான் சுவாமிகளிடம் அழைத்துக்கொண்டு வந்தேன்" என்றான். உடனே சுவாமிகள், "பிசாசாகப் பார்த்தானோ? வயிற்றுவலி போய்விட்டது போய்விட்டது போய்விட்டது" என்று கூறித் திருவைந்தெழுத்தை யோதித் திருநீற்றை அளித்தருளியது. அன்று முதல் அவனுக்கு வயிற்றுவலி வருவது நின்றுவிட்டது.

## பேயை ஓட்டிய பெருமை

சுவாமிகள் கோடியக்காட்டிற்குப் போய் ஒருநாள் தில்லம்பால் சாப்பிட்டுவிட்டுப் பக்கத்திலிருந்த ஒரு வேப்ப மரத்தடியில் நிட்டையில் அமர்ந்திருந்தது. அப்பொழுது அவ்வீட்டத்திற்கு ஒரு மனிதன் வந்தான் இரண்டு மூன்று பெண்கள் சேர்ந்து ஒரு பெண்பிள்ளையை வலுக்கட்டாயமாக இழுத்து வந்தார்கள். அப்பெண் தலைவிரிகோலமாக இருந்தாள். ஆடையும் அலங்கோலமாக இருந்தது. அவள் அப்படியும் இப்படியுமாக ஆடிக்கொண்டிருந்தாள். முன்னே வந்த மனிதன் சுவாமிகட்கு முன் வீழ்ந்து வணங்கினான். "சுவாமி! இப்பெண் அடியேனுடைய மனைவி; இவளைப் பேய் பிடித்திருக்கிறது. அப்பேயை விரட்டியருள வேண்டும்" என்று கூறி வேண்டிக்கொண்டான். உடனே சுவாமிகள் நகைத்து, அப்பெண்ணை நோக்கி "நீதான் ஒரு பேயாயிற்றே; ஒரு மனிதனைப் பிடித்துப் புருஷனாக ஆட்டுகிறாயே உன்னையுமா ஒரு பேய் பிடித்து ஆட்டுகிறது?" என்று கூறித் திருவைந்தெழுத்தை யோதிச்

சிறிது திருநீற்றைத் தமது உள்ளங் கையில் வைத்து ஒரு சக்கரம் மந்திரம் ஆகியவைகளை யெழுதி அப்பெண் மீது தம் வாயால் ஊதியருளியது. அன்றுமுதல் அப் பெண்ணுக்குப் பேய்போல் ஆடும் தொல்லை நீங்கியது.

## எங்கும் விளங்குதல்

அங்கிங் கெனாதபடி எங்கும் வியாபித்திருப்பது கடவுளுடைய தன்மை; அத்தன்மை நமது சுவாமி களிடம் நன்கு அமைந்திருந்தது. சுவாமிகள் பகல் போதில் வல்லுண்டாம்பட்டி, பூண்டி, தஞ்சை, நாகை முதலிய இடங்களில் இருப்பார்கள். ஒரே நேரத்தில் சுவாமிகளை மேற்படி ஊர்களிலெல்லாம் அன்பர்கள் பார்த்ததாகக் கூறுவர். பகற்போதில் எங்கிருப்பினும் மாலைப் போதில் தில்லம்பால் சாப்பிடக் கோடியக்காடு செல்லும் வழக்கம் தவறுவதில்லை.

## உப்புக் குவியல் கல்லானது

கோடியக்காட்டுப்பக்கம் ஒருநாள் சென்ற அடிகள் உப்பளத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்த உப்புக் குவியல் ஒன்றின்மீது ஏறி நிட்டையில் அமர்ந்துவிட்டார். உப்பளத்தில் காவலாகச் சுற்றிக் கொண்டிருந்த ஒருவன் சுவாமிகளைப் பார்த்து யாரோ கள்ளன் உப் பளம் வந்திருக்கிறான் என்று எண்ணிக்கொண்டு "அடே யார் அங்கே?" என்று கூவிக்கொண்டே ஓடி வந்தான். சுவாமிகள் மாயமாக மறைந்துவிட்டார்கள். மறுநாள் குவியலைப் பார்த்தபோது உப்பு முழுவதும் கற்களாக இருக்கக் கண்டனர்.

## வறியவன் வாழ்வு பெற்றது

அகத்தியான்பள்ளி என்னும் ஊரில் இருந்த ஓர் எளியவன் சுவாமிகளுடைய பெருமையை உணர்ந்தான். அடிக்கடி கோடியக்காட்டுக்குப் போய்ச் சுவாமிகள் அங்கு வருஞ் சமயம் பார்த்துக் கண்டு தொழுது வந்தான். ஒருநாள் சுவமிாகளைப் பார்த்துச் "சுவாமி! நான் மிக வறியவன்; எனக்கு ஏழெட்டுப் பிள்ளைகள் பிறந்துவிட்டார்கள்; அவர்களைக் காப்பாற்றுவதற்கு நான் மிகவுங் கஷ்டப்படுகிறேன். அடியேனுக்குச் செல்வ நலம் உண்டாகுமாறு சுவாமிகள் திருவருள் செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். சுவாமிகள் எத்தகைய மறுமொழியுங் கூறவில்லை. திருநீறு மட்டும் வழங்கி யருளியது. அதுமுதல் அவ்வறியவன் சீருஞ் சிறப்பும் பொருந்திய வாழ்க்கையுடையவனுனன்.

## அமாவாசை விரதக் கூத்து

வல்லுண்டாம்பட்டியில் சுவாமிகளை நீண்டகாலம் போற்றிக்கொண்டிருந்த அன்பர் ஒருவர் ஓர் அமாவாசை நாளன்று சுவாமிகட்குத் தம்முடைய வீட்டில் சாப்பாடு செய்விக்க வேண்டும் என்று எண்ணினுர்; அதன் பொருட்டுச் சிறப்பாகச் சமையலுஞ் செய்து வைக்கப் பெற்றது. இதேபோல் குருங்களூர், கொல்லர்ன்கரை, பூண்டி, வேதாரணியம், அகத்தியான்பள்ளி முதலிய பலவிடங்களினுமிருந்த அன்பர்களும் மேற்படி அன்பரைப் போலவே சுவாமிகட்கு அமாவாசைச் சாப்பாடு செய்து வைக்க வேண்டும் என்னும் எண்ணத்தோடு சிறப்பாகச் சமையல் செய்து வைத்துக்கொண்டு சுவாமிகளின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

பதினொரு மணிவரை சுவாமிகளைக் காணாதபடியால் நம்முடைய எண்ணம் எங்கு ஈடேற வழியில்லாமற் போகிறதோ என்று எண்ணமிட்டு வருந்திக்கொண்டிருந்தார்கள். சுவாமிகளோ பன்னிரண்டு மணிக்கு அன்பர்கள் அனைவருடைய இல்லத்திலும் ஒரே சமயத்தில் சாப்பிட்டார்கள். அன்பர்கள் ஒவ்வொருவரும் இன்று சுவாமிகட்கு நாம்தான் சாப்பாடு செய்து வைத்தோம் என்று மகிழ்ச்சியடைந்துகொண்டிருந்தார்கள். பிறகு அந்த அன்பர்களிற் சிலர் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்த போது சுவாமிகள் எல்லா விடங்களினும் உணவு கொண்டு அன்பர்கள் அனைவருடைய எண்ணத்தையும் நிறைவேற்றிய செய்தியை உணர்ந்து மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்தார்கள். அதுமுதல் ஒவ்வொருவருடைய எண்ணத்தினும் சுவாமிகளைப் பற்றிய மதிப்பு மிகுதியாயிற்று.

## நீதிமன்றஞ் சென்ற புதுமை

ஒரு சமயத்தில் குண்டூர் சாத்தனூர் ஆகிய இடத்தில் இருந்தவர்களுக்குள் நாகப்பட்டினம் நீதிமன்றத்தில் வழக்கொன்று நடைபெற்றது. அவ்வழக்குச் சுவாமிகளுடைய அன்பர்கட்குத் தோல்வியாக முடியும் போல் இருந்தது. சுவாமிகளுடைய அன்பர்கள் சுவாமிகளிடம் வந்து, "சுவாமிகள் அருள் செய்து நாகப்பட்டினத்திற்கு வந்தால் வழக்கு எங்களுக்கு வெற்றியாக முடியும்" என்று கூறினார்கள். சுவாமிகள் அந்த அன்பர்களைப் பார்த்து "நீங்கள் போங்கள் நாம் வருகிறோம்" என்று கூறி அந்த அன்பர்களை அனுப்பிவிட்டு இருந்தவிடத்திலேயே இருந்தார்கள். புகைவண்டியிற் சென்ற அந்த அன்பர்கள் சுவாமிகள் நம்மோடு

வரவில்லையே ? இனிமேல் எப்படி வரப்போகிறார் என்று எண்ணமிட்டுக்கொண்டு மனவருத்தத்துடன் சென்றார்கள். சுவாமிகள் இவர்கள் நாகப்பட்டினஞ் சேர்வதற்கு முன் தமது வழக்கமான பயணத்தில் புறப்பட்டு நாகையை அடைந்து வழக்கறிஞரைக் கண்டு பேசிவிட்டு நீதி மன்றத்துக்குப் போய் ஓரிடத்தில் எழுந்தருளியிருந்தார்கள். புகைவண்டியிற் சென்ற அன்பர்கள் சுவாமிகளை அங்கு கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள் ; வழக்கறிஞரைக் கண்டு பேசியதையும் உணர்ந்தார்கள். சுவாமிகளின் பெருமை இருந்தவா றென்னேயென்று மிகுந்த வியப்படைந்தார்கள். நீதிமன்றத்தில் நடந்த வழக்கும் சுவாமிகளுடைய அன்பர்கட்கு வெற்றியாக முடிந்தது.

## பசும்பால் பருகிய புதுமை

செல்வர் ஒருவருடைய பசுக்கள் பலவற்றை மாடு மேய்ப்பவர்கள் மேய்த்துக் கொண்டிருந்தனர். எல்லாப் பசுக்களும் நன்கு பால் கறந்து கொண்டிருக்க ஒரு பசுவினிடம் மட்டும் நாள்தோறும் பால் மிகக் குறைவாக இருந்தது. சில நாட்களில் அடியோடு இல்லாமலும் இருந்தது. மாட்டுக் குரியவருக்கு அதன் காரணம் விளங்கவில்லை. மாடு மேய்ப்பவர்கள் கறந்து குடித்து விடுகிறார்களோ என்று எண்ணினார். அவ்வாறு கறப்பதற்குங் கன்றில்லாமற் பசு பால் கொடாதே என்று எண்ணினார். "அம்மாட்டிடம் பால் இல்லாமற் போவதற்குக் காரணம் யாது ?" என்று மாடு மேய்ப்பவர்களிடம் உசாவினார். அவர்களோ எங்களுக் கொன்றுந் தெரியாதென்று கூறினார்கள். பால் இல்லாமற் போவதற்குக் காரணத்தை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

இல்லாவிட்டால் உங்கட்குச் செம்மையாக உணவு கிடைக்கும்" என்று அச்சுறுத்தினார். மாடு மேய்ப்பவர்கள் அம்மாட்டின் செய்கையைக் கருத்துடன் கவனிக்கலாயினர். நமது சுவாமிகள் அரசமரம் ஒன்றின் கீழ் மல்லாந்தபடியே படுத்திருந்தனர். அப்பசு சுவாமிகளுடைய வாய்க்கு நேரே தனது முலைப் பால் காம்பைக் கொண்டுபோகவும் பசுவின் பால் சுவாமிகளின் வாயிற் பொழிந்தது. இப்புதுமையைக் கண்ட மாடு மேய்ப்பவர்கள் அன்று மாலையில் மாட்டுக்குரியவரிடம் தாங்கள் கண்ட செய்தியைக் கூறினர். இதனைக் கேட்ட மாட்டுக்குரியவர் மிகுந்த வியப்படைந்தார். "ஆ அப்படியா ? செய்தி ! அவர் ஒரு பெரிய மகானாக இருக்கவேண்டும். இனிமேல் நீங்கள் அந்தப் பக்கமே போகாதீர்கள். எல்லா மாடுகளுடைய பாலும் போனாலும் போகட்டும்" என்று கூறிவிட்டார்.

## மறைக்காட்டு கோயிலில்

கோடியக்காட்டுக்குத் தில்லம்பால் சாப்பிடச் செல்லும் சுவாமிகள் திருமறைக்காட்டிற்குஞ் செல்வதுண்டு. ஒரு நாள் திருமறைக்காட்டையடைந்த சுவாமிகள் மேற்குப் பக்கம் உள்ள வீரகத்தி விநாயகர் கோயிலில் நிட்டையில் அமர்ந்தார். இரவில் கோவிலைப் பூட்டும் நேரமாகிவிட்டது. சுவாமிகள் எழும்பவில்லை. கோவிலைப் பூட்டுவோர் சுவாமிகளிடம் சென்று "கோவிலைப் பூட்டப் போகிறோம்" என்று சொன்னார்கள். எத்தகைய மறுமொழியும் வரவில்லை. எழும்பவும் இல்லை. கோயில் தலைமையதிகாரியிடஞ் சென்று "கோடியக்காட்டிற்கு அடிக்கடி வருஞ் சாமியார்

பிள்ளையார் கோவிலுக்குள் நிட்டையிலிருக்கிறார். வெளியே வரச்சொன்னால் பேசாமல் இருக்கிறார்'' என்றார்கள். கோவில் அதிகாரி கொஞ்சம் முரட்டுப் பேர்வழி ஆகவே அவர், "இரண்டுபேர் சேர்ந்து தூக்கிக்கொண்டு போய் வெளியே வைத்துவிட்டுப் பூட்டிக்கொண்டு செல்லுங்கள்'' என்றார். உடனே இரண்டு பேர் சென்று சுவாமிகளை அலக்காகத் தூக்கத் தொடங்கினார்கள். சிறிது கூட அசைக்கமுடியவில்லை. பிறகு நாலைந்து பேராகச் சேர்ந்து தூக்க முயன்றார்கள். அப்பொழுதும் முடியவில்லை; மலைபோற் கனமாகி அசைக்க முடியாமற் போவது எண்வகைச் சித்திகளில் ஒன்று. இதனைத் தூக்க முயன்றவர்கள் அறியார்கள். அதற்குள் அங்கு ஒரு கூட்டஞ் சேர்ந்துவிட்டது. சுவாமிகளை நன்கு ணர்ந்திருந்த சிலர் "அவர் ஒரு சித்தபுருஷர் அவர் சோலிக்குப் போகாதீர்கள்; உங்கட்கு ஏதாவது தொல்லை வரும். நீங்கள் கோவிலைப் பூட்டிக்கொண்டு போங்கள். அவர் போய்விடுவார்'' என்று சொன்னார்கள். கோவிலைப் பூட்டுவோர் எப்படிப் போகிறார் பார்ப்போம் என்று மனத்துக்குள்ளேயே எண்ணிக்கொண்டு கோவிலைப் பூட்டிக்கொண்டு சென்றார்கள். மறுநாட் காலையில் வந்து கோவிலைத் திறந்தபோது சுவாமிகள் அங்கில்லை.

## மிருக்கால் நேர்ந்த இடுக்கண்

ஒரு நாள் சுவாமிகள் ஐயங்கடைத் தெரு வழியே சென்றார்கள். தம்முடைய அன்பர் ஒருவரைப் பார்க்க விரும்பிய சுவாமிகள் ஒரு பலசரக்குக் கடைக்காரரிடம் தாம் பார்க்க விரும்பிய அன்பருடைய பெயயரைக் கூறி அவர் எங்கிருக்கிறார் தெரியுமா ? என்று கேட்டனர்.

வேறொருவருக்கு யாதோ சாமான் எடுத்துக் கொண்டிருந்த அவ்வன்பர் சுவாமிகள் கூறியதைக் காதில் கேட்டாராயினும் தக்கவாறு மறுமொழி கூறாமல் பராமுகமாகவும் மிடுக்காகவும் இருந்தார். தாங் கேட்டதற்குச் சரியான மறுமொழி கிடைக்கப் பெறாத சுவாமிகள் அவ்விடம் விட்டுச் சென்றுவிட்டனர். சிறிது நேரமாயிற்று. மளிகைக் கடை அன்பருக்கு அங்கு வந்து சாமான்கள் கேட்பவர்கள் பேசியது சிறிதுங் காதில் விழவே இல்லை. வந்து சாமான் கேட்டவர்கள் கடைக்காரர் தாங்கேட்ட சாமானை எடுத்துக் கொடுக்காமற் போகவே அவ்விடம் விட்டு வேறு கடைக்குச் செல்லலாயினர். கடைக்காரருக்கு வருகிற அன்பர்கள் சொல்வது தமது காதில் விழவில்லை என்னுஞ் செய்தி வெகு நேரத்திற்குப் பிறகுதான் விளங்கியது. அதற்குக் காரணம் என்னவென்று அவர் நெடுநேரம் எண்ணிப் பார்த்தபோது ஸ்ரீ பால்சுவாமிகள் அங்கு வந்து கேட்டதற்குத் தாம் மறுமொழி கூறாது அசட்டையாக இருந்தது அவருடைய நினைவுக்கு வந்தது. "அந்தோ பெரியவர்களிடம் தவறு செய்தோமே" என்று உள்ளம் வருந்தினார். சுவாமிகளைத் தேடிக் கண்டுபிடித்து வணங்கி மன்னிப்புப் பெறவேண்டுமென்று எண்ணினார். சித்தராகத் திரியுஞ் சுவாமிகளை எங்குத் தேடிக் கண்டுபிடிப்பது? அன்று முழுவதுங் கேட்காமலிருந்த காது மறுநாள் வழக்கம்போல் கேட்கலாயிற்று. சுவாமிகள் எவருக்கும் தீமை நினையாத திருவுள்ளமுடைய பெரியாராகலின் அன்பருக்கு நேர்ந்த தொல்லை இத்துடன் முடிந்தது". "எரியாற் சுடப்படினும்

உய்வுண்டாம் உய்வில்லை, பெரியார்ப் பிழைத்தொழுகுவார்'' என்பது தமிழ் மறையன்றோ ?

**மாரியம்மனாகக் காட்சியளித்தது**

தஞ்சாவூருக்கு அண்மையில் உள்ள மாரியம்மன் கோவிலில் திருவிழா நடைபெற்றது. பூண்டிப் பக்கமிருந்து வந்த சுவாமிகள் கோவிலுக்குச் சென்று ஒரு மூலையில் நிட்டை கூடியிருந்தனர். கோவிலில் மக்களின் கூட்டம் மிகுதியாக இருந்தது. அன்பர்கள் பலர் மாரியம்மனைப் பார்த்து வழிபட முடியாமல் கூட்டத்தில் சுற்றிக்கொண்டிருந்தனர். நமது சுவாமிகளை அறிந்திருந்த அன்பர்கள் "அதோ சுவாமிகள் இருக்கிறார்கள் அவர்களையாவது போற்றி வழிபடுவோம்'' என்று கூறிக்கொண்டு சுவாமிகள் நிட்டையில் இருந்த இடத்திற்கு வந்தனர். வந்தவர்கள் இந்த இடத்தில் ஸ்ரீபால் சுவாமிகளைக் காணவில்லை. மாரியம்மன் இருப்பதைக் கண்டு வியந்து போற்றி வழிபட்டுக்கொண்டு நின்றார்கள். சிறிது போதுக்கெல்லாம் மாரியம்மனைக் காணவில்லை. ஸ்ரீ பால்சுவாமியையே கண்டார்கள். அன்பர்களுக்கு மிகுந்த வியப்புண்டாகிவிட்டது. "இப்பொழுது சுவாமிகளை மாரியம்மன் மாதிரி பார்த்தோம். ஆனால் அதற்குள் மாறிவிட்டதே இது மிகவும் வியப்பாக இருக்கிறதே'' என்றார்கள். அதற்குச் சுவாமிகள் "நாம் பார்க்கின்ற எல்லாம் மாரியம்மன் தானே'' என்றார்கள். சுவாமிகள் தத்துவார்த்தத்தை வைத்துக்கொண்டு பேசினார்கள். ஆனால் அன்பர்கட்குச் சுவாமிகள் பேசியதன் பொருள் விளங்கவில்லை. பேசாமல் இருந்துவிட்டார்கள்.

## அப்பர் குருபூசையில் நிகழ்ந்தது

தட்சிண கைலாசமாகிய திருவையாற்றிலிருந்த ஓர் அன்பர் சித்திரைத் திங்களில் சதய நாளில் திருநாவுக்கரசர் என்னும் அப்பர் சுவாமிகட்குக் குருபூசை நடத்தினார். நண்பகற் போதில் மாகேசுர பூசை நடத்துவதற்கு ஏறக்குறைய நூறு இலைகட்கு மேல் போட்டுப் பரிமாறினார். பிறகு வெளியே வந்து உட்கார்ந்திருந்த அடியார்களை யெல்லாம் சாப்பிடுவதற்கு உள்ளே அனுப்பினார். உள்ளே சென்ற அடியார்கள் முதலாவது இலையை விட்டு விட்டு இரண்டாவது இலை முதற்கொண்டு உட்கார்ந்தார்கள். முதல் இலையில் யாருஞ் சென்று உட்காரவில்லை சும்மா கிடந்தது. குருபூசை நடத்தும் அன்பர் தாம் பெரியவர் என்று எண்ணிய ஒருவரைப் பார்த்துச் "சுவாமிகள் முதல் இலையில் போய் உட்காரட்டும் முதல் இலை சும்மா கிடக்கிறது" என்றார். அதற்கு அவ்வடியவர், நான் பெரியவனல்லன்" வேறு யாரையாவது அழைத்துக்கொண்டு போய் உட்காரச் சொல்லுங்கள்" என்று கூறி மறுத்துவிட்டார். வேறு சிலரிடங் கூறியபோது அவர்களும் இவ்வாறே கூறி முதலிலே போய் உட்கார முடியாதென்று மறுத்து விட்டார்கள். குருபூசை நடத்திய அன்பருக்கு இஃது ஒரு புதுமையாக இருந்தது. "பந்திக்கு முந்து படைக்குப் பிந்து" என்று பழமொழி இருக்கிறது. அவ்வாறாகவும் இஃதென்ன வேடிக்கை இன்னும் யாராவது வந்தால் அழைத்துக்கொண்டு வந்து உட்காரச் சொல்லுவோம் என்று எண்ணிக் கொண்டே வெளியே வந்தார். இதே சமயத்தில் ஸ்ரீபால் சுவாமிகள் உள்ளே நுழைந்தனர். அன்பருக்கு மிகுந்த

வியப்பாகி விட்டது. எண்வகை உறுப்புகளும் நிலத்தில் தோயுமாறு வீழ்ந்து வணங்கி உள்ளே அழைத்துக் கொண்டு சென்றார். சுவாமிகள் நேரே முதல் இலையிற் போய் அமர்ந்தனர். மாகேசுவர பூசை சிறப்பாக நடைபெற்றது. அங்கு வந்திருந்த அடியவர்களும் பிறரும் முதல் இலை காலியாக விருந்ததையும் அதிற் சுவாமிகள் வந்து அமர்ந்ததையுங்கண்டு பெருவியப்படைந்தனர். இந்நிகழ்ச்சியை அன்பர்கள் பல நாள்வரை கூறிப் பால் சுவாமிகளின் பெருமையை வியந்து புகழ்ந்தனர்.

## பொறுமை என்பது மாதர்க்கணிகலம்

சுவாமிகள் ஒருநாள் அம்மாப்பேட்டை என்னும் ஊரில் தெருவழியே சென்றுகொண்டிருந்தார்கள். ஒரு வீட்டு வாசலில் தெருவில் ஒரு பெண் கூட்டிக்கொண்டிருந்தாள். அவள் சுவாமிகளைப்பற்றி அறிந்தவளா அறியாதவளா என்பது தெரியவில்லை. அவள் சுவாமிகள் வருவதைக் கண்டும் கூட்டுவதை நிறுத்திக் கொண்டு ஒருபக்கம் ஒதுங்கி நின்றாளில்லை. சுவாமிகளை ஒரு பொருட்படுத்தாமல் கூட்டிக் கொண்டிருந்தாள். அவ்வாறு கூட்டினால் செல்பவர்கள் மீது குப்பை பறக்குமே என்பதையும் அவள் நினைக்கவில்லை. தன்பாட்டிற் கூட்டிக்கொண்டே யிருந்தாள். சுவாமிகள் சிறிது விலகிச் சென்றுவிட்டனர். இதனைக் கண்ட சிலர் ஒரு பெரியவர் செல்வதைக் கண்டும் இவள் மதிப்புக் காட்டிக் கூட்டுவதை நிறுத்தி ஒதுங்கிக் கொள்ளவில்லையே யென்று உள்ளம் வருந்தினர். மறு விநாடியில் ஒரு சூறைக்காற்று அத்தெருவில் கிடந்த குப்பைகளை யெல்லாம் அவள் கூட்டிக்கொண்டிருந்த இடத்திற் தள்ளி

விட்டுப் போயிற்று. இதனைக் கண்டவர்கள் பேதை மாதின் அறிவின்மைக்குக் கூலி கையிலேயே கிடைத்து விட்டதென்று எண்ணினர். வேறுசிலர் இம்மாதுக்கு இன்னும் யாது தொல்லை யேற்படுமே என்று அஞ்சினர். பல நாள் வரையில் அவ்வீட்டு வாசலில் குப்பை பட்டரையாகவே கிடந்தது ஆனால் அருட் கடலாகிய சுவாமிகள் அப்பேதை மாதுக்கு வேறெத்தகைய தொல்லையும் உண்டாக விடவில்லை.

## சிற்றுண்டி வழங்கிய பதுமை

ஸ்ரீ பாற்சுவாமிகள் தற்போது மடாலயம் அமைந்திருக்குந் தோட்டத்தில் தமது வாணாளின் பிற்காலத்தில் அதிகமாகத் தங்கி நிட்டை சாதித்துக் கொண்டிருந்தார்கள். பிற்காலத்தில் வழக்கறிஞரும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை அமைத்தவருமாகிய த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அந்நாளிற் சிறுவராக விருந்தார். இந்த உமாமகேசுவரரும் இவருடைய நண்பர்களும் அடிக்கடி ஸ்ரீபாற் சுவாமிகளிடம் வருவதுண்டு. அப்பொழுது ஸ்ரீபாற்சுவாமிகள் கட்டாந்தரையில் படுத்திருப்பார்கள் சுவாமிகள் படுத்திருக்கும் இடத்தில் எப்பொருளும் இரா. படுத்திருக்குஞ் சுவாமிகள் தம்மிடம் வருஞ் சிறுவர்களைப் பார்த்ததும் "வாருங்கள் குழந்தைகளே ! உங்கட்கு என்ன வேண்டும் ?" என்று கேட்பர்கள். அச்சிறுவர்களோ இலட்டு, மிட்டாய், பழம் முதலிய தங்கட்கு விருப்பமானவைகளைக் கூறுவார்கள். சுவாமிகள் மறுகணமே அச்சிறுவர்கட்கு அவர்கள் விரும்பியதை வழங்குவார்கள். இவ்வாறு அச்சிறுவர்கட்குச் சிற்றுண்டி வழங்குவது பலநாள் நிகழ்ந்து கொண்டிருந்தது.

## முன்னே செல்லுதல்

சுவாமிகள் தம்மை யார் எங்கு கூப்பிட்டாலும் வரு வதாகக் கூறி அவர்களோடு செல்லாமல் அவர்கட்கு முன்னுற் சென்றிருக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந் தார்கள் : பூண்டித் தெற்குத் தெரு விஞ்சைராயர் வீட் டில் சுவாமிகள் வெகுநாள் தங்கியிருந்தபோது வெளி யூர்ச் சிறப்புக்கட்குச் செல்லும்போது உடனழைப்பார் கள். சுவாமிகள் அவர்களோடு செல்லாமல் அவர்கட்கு முன்னுல் சென்று வியப்பூட்டும் வழக்கத்தை மேற்கொண் டிருந்தர்கள்.

## கூழுண்டல்

வல்லுண்டான்பட்டியில் ஒரு மூதாட்டி ஸ்ரீபாற் சுவாமிகளிடத்தில் அளவுகடந்த அன்புகொண்டிருந் தார். அம்மூதாட்டி வாழ்ந்திருந்தது ஒரு குடிசை வீடு. அகவை முதிர்ந்திருந்த அவ்வம்மையார் அடிக்கடி ஸ்ரீபாற்சுவாமிகளைப் பார்க்க எண்ணுவதுண்டு. அம் மையார் எண்ணும் போதெல்லாம் சுவாமிகள் அம் மூதாட்டியின் முன்பு தோன்றுவார்கள். அவ்வம்மையார் அன்புடன் அளிக்கும் கூழைச்சாப்பிட்டுவிட்டு மறைந்து விடுவார்கள்.

## சுவாமிகள் சஞ்சாரம்

சுவாமிகள் ஓரிடத்திலும் நிலையாக இருப்பதில்லை. "பொருந்திவாழ் இடமொன்றுகில் பொருந்திடும் பற் றென்றெண்ணி இருந்திலன் ஓரிடத்தும் எங்கெங்கும் ஒருவனுகி" என்பது மகாராசாத் துறவு. சுவாமிகள் இதற்கேற்பவே எங்குஞ் சுற்றிச் சஞ்சரிக்கலாயினர்.

ஆனால் பூண்டி திரு வாண்டையார் விஞ்சைராயர் வீடு களிலும், உக்கடை திரு தேவர் வீடுகளிலும் அதிக நாட்கள் தங்கி திருவருள் புரிந்தார்கள்.

**மக்கட் பேறு**

சுவாமிகள் பூண்டி விஞ்சைராயர் வீட்டில் சிலநாள் தங்கி யிருந்தபோது, வீரைய வாண்டையார் மனைவி சுவாமிகளுடைய பெருமையை உணர்ந்து சுவாமிகளைத் தமது இல்லத்திற்கு அழைத்துச் சென்று போற்றி வழிபடலாயினர். சுவாமிகளைக் குருமூர்த்தியாகக் கொண்டு பெரிதும் போற்றினர். சுவாமிகட்கு வேண் டிய பணிவிடைகளையெல்லாம் புரிந்துவந்தனர். தமது புதல்வன் அப்பாச்சாமிக்கு இரண்டுமுறை திருமணஞ் செய்தனர். இரு மனைவியர்களிடத்திலுங் குழந்தைகள் பிறக்கவில்லை. மூன்றாவதாகவும் ஒரு பெண்ணைத் திரு மணஞ் செய்து வைத்தனர். இந்த மூன்றாவது அம்மை யார் கர்ப்பம் போல் வயிறு வாய்ப்பதும் பிறகு உதிர மாகப் போவதுமாக இருந்தது.

சுவாமிகட்குப் பணிபுரிந்து வந்த அம்மையார்க்கு நமது புதல்வனுக்குப் பிள்ளையில்லையே என்ற ஏக்கம் பெரிதாக இருந்தது. அதனால் சுவாமிகளிடம் தமது குறையை முறையிட்டு வேண்டிக்கொண்டார்கள். சுவாமிகள் திருநீறளித்துக் "குழந்தைகள் பிறக்கும்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அதன் பிறகு உதிர மாகப் போவது நின்று குழந்தை பிறந்தது. முதலாவ தாகப் பிறந்த பிள்ளைக்குச் சுவாமிகளுடைய பெயரை வைத்து நாராயணசாமி என்று அழைத்தனர். அவ் வாறு பெயர் வைத்து அழைத்ததோடு குல வழக்கப்படி

வீரையா என்றும் பெயர் வைத்து அழைத்தனர். இவர்கள் தாம் ராவ்பஹதூர் திரு வீரையா வாண்டையார் ஆவார்கள். இரண்டாவதாகப் பிறந்த பிள்ளைக்குக் கிருட்டிணசாமி என்று பெயர் வைத்தனர். சுவாமிகளுடைய அருளாற் பிறந்த அக்குடும்பத்தினர் சுவாமிகளைப் போற்றி பாராட்டி வருவதோடு சுவாமிகளுடைய குருபூசையிலும் முக்கியமான பங்குகொள்ளுகின்றனர். ஷை வீரையா வாண்டையாருடைய பாட்டியார் தர்மசம்வர்த்தினியம்மையார் சுவாமிகளைக் குருவாகக் கொண்டு ஒழுகி வந்தனர். 30 ஆண்டுகள் பாலுந் தேனும் மட்டுஞ் சாப்பிட்டுச் சுவாமிகள் சமாதியடைந்த திருவோண நட்சத்திரத்தில் உடலை யொழித்து வீடுபேற்றை யடைந்தார்கள். அவ்வம்மையாரைச் சமாதி வைத்துக் கோயிலுங் கட்டப்பட்டுள்ளது. உக்கடை திரு அப்பாவுத்தேவர் முதலான அன்பர்களும் சுவாமிகளின் திருவருள் பெற்று விளங்கியதோடு இந்நாளிலும் சுவாமிகளின் சமாதியாலயத்திற்கு உதவி செய்து வருகிறார்கள்.

## தஞ்சை மாநகரில் சமாதியடைதல்

பெருஞ் சித்தராக விளங்கிய நமது சுவாமிகள் இறுதிக்காலத்தில் பல அன்பர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கித் தஞ்சை மாநகரத்தில் சதாசிவராயர் என்பவருடைய தோட்டத்தில், நிட்டை சாதித்துக் கொண்டும் அடியார்கட்குத் திருவருள் புரிந்துகொண்டும் இருந்து கலி நாலாயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து மூன்று (4983) (ஆங்கிலம் 1881)க்குச் சரியான விஷு ஆண்டு மார்கழித் திங்கள் பதினொன்றும் நாளில் பூர்வ பட்ச சதுர்த்தி திதியில் திருவோண நட்

சத்திரத்தில் பகல் பதினொரு நாழிகையில் சச்சிதானந்த் சொரூபப் பரப்பிரஹ்மத்திலே இரண்டறக் கலந்தருளினார். சுவாமிகள் வீடு பேறடைந்த காலத்தைச் சுவாமிகளுடைய அன்பர்களில் ஒருவராகிய பூண்டி உபாத்தியாயர் தருமலிங்கம் பிள்ளையவர்கள் பின்வருஞ் செய்யுளில் அமைத்துப் பாடியுள்ளார்.

காசினியில் வாழுயிர்க ளியாவையுங் காத்திடக்
கடவுளே யவத ரித்துக்
கற்பகத் தருவென்ன அடிமைகட் குரியநல்
கதிகள்மேன் மேலும் உதவி
மாசிலா யோகியர் வசிக்குந் திருத்தஞ்சை
மாநக ரெனுந்த லத்தில்
வாசமிகு பூமரஞ் சூழ்சதா சிவராயர்
மகிழுநந் தனவ னமதில்
ஆசில்கலி நாலாயி ரத்துத்தொ ளாயிரத்
ததனெடெண் பத்து மூன்றில்
ஆண்டுவிஷு மதிதனுசு தேதிபதி னொன்றுபங்
காம்பட்ச முதல்ச துர்த்தி
தேசுவளர் திருவோண நாழிபகல் பதினொன்றில்
தேவர்கள் எல்லாம்ம கிழ்ந்து
தேன்மாரி பொழியநா ராயணப் பிரமநற்
சிவத்துட னுகந்துற் றதே.

## முதல் மாணவர்

வல்லுண்டாம்பட்டியிலிருந்த கோவிந்த வல்லுண்டார் என்பவர் சுவாமிகளுடைய பெருமையை நன்குணர்ந்தபடியால் சுவாமிகளையே தம்முடைய குரு

மூர்த்தியாகக் கொண்டு பணிபுரியத் தொடங்கினார். இல்வாழ்க்கையை வெறுத் தொதுக்கிவிட்டுச் சுவாமிக ளோடு கூடவே திரிந்து ஆகவேண்டியவைகளைச் செய்து சுவாமிகளுடைய திருவருளுக்கு உரியவராக விளங்கி யிருந்தார்.

## இறுதியுரை

சுவாமிகளுடைய உடல் சமாதி வைக்கப்பெற்று நாள் வழிபாடு சிறப்பு வழிபாடாகிய குருபூசை ஆகி யன நன்கு நடைபெற்று வருகின்றன. இஞ்ஞான்றும் அன்பர்கள் பலர் சுவாமிகளின் வடிவாகிய சிவலிங்கத்தை வழிபட்டுத் தாம் எண்ணிய எண்ணமெல்லாம் இனிது நிறைவேறப் பெறுகின்றனர். சுவாமிகளுடைய திரு மடாலயம் மிகுந்த சிறப்பொடு விளங்குகிறது.

தவத்திரு பால் சுவாமிகளின் சமாதியாலய மடா லயம் சிறந்து விளங்கி வரும் முறையிற் நாள் வழிபாடு, குருவழிபாட்டுப் பெருவிழா முதலியவைகளை நடத்தி வருந் தலைவர்களின்

### பெயர் வரிசை

1. தவத்திரு பாலைய கோவிந்த சுவாமிகள்
2. தவத்திரு பிரம நிஷ்ட பண்டித வி.குப்புசாகி மஹாராஜ் என்னும் பூர்வாசிரம நாமம் பூண்ட ஸ்ரீ பிரஹ்மாநந்த சுவாமிகள்
3. தவத்திரு செல்லப்ப ஞானதேசிக சுவாமிகள்
4. தவத்திரு வீரசேகர கிருஷ்ண சுவாமிகள்

5 தவத்திரு மகா. கோவிந்த சுவாமிகள்
6 தவத்திரு மகா. கோ. வாசுதேவ சுவாமிகள்
7 தவத்திரு மு. கோ. கிருஷ்ண சுவாமிகள்

## ஸ்ரீ பால்சுவாமிகள் மடம்

1881-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ஆம் நாள் ஸ்ரீ பால்சுவாமிகள் சமாதியடைந்தபோது ஸ்ரீகோவிந்த சாமிச் சுவாமி என்பவர் சுவாமிகளுடைய சீடராக இருந்து சுவாமிகட்கு ஆகவேண்டிய பணிகளைச் செய்து கொண்டிருந்தார். அவர் ஸ்ரீ பால்சுவாமிகளைச் சமாதி வைத்துச் சமாதிக் கோயில் கட்டினார். சாதுக்கள் தங்கியிருப்பதற்கு மடம் அமைத்தார். தாம் பெரு முயற்சி செய்து நிலபுலங்கள் வாங்கிப் பூசை முதலியன சிறப்பாக நடப்பதற்கு ஏற்பாடு செய்தார். 1902-ஆம் வருடம் வரை எல்லாவற்றையுஞ் சிறப்பாக நடத்தி விதேக முக்தி யடைந்தார்.

பிறகு விசார சந்திரோதயம், பாலபோதம், விசார சாகரம், விருத்திப் பிரபாகரம் முதலிய பல வேதாந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தவரும் பின்னளில் பிரஹ்மாநந்த சுவாமிகள் எனப் பெயர் பெற்று விளங்கியவருமாகிய பிரமநிஷ்ட பண்டித குப்புச்சாமிராசு அவர்கள் ஓராண்டுக்காலம் மடாலய பரிபாலனத்தை நடத்தி வந்தார் அதன் பிறகு 1903-ஆம் ஆண்டில் ஸ்ரீ செல்லப்ப சுவாமிகள் என்பவர் மடாதிபதியாக அமைந்து காரியங்களை நடத்திவந்தார். அந்நாளில் தேவகோட்டைப் பெருநிலக்கிழார் அருணசலஞ் செட்டியார் அவர்கள் தாம் காளையார் கோவிலில் நிறுவிய வேதாந்த மடத்திற்குத் தலைவராகச் செல்லப்ப

சுவாமிகளை யழைத்தார். ஸ்ரீ செல்லப்ப சுவாமிகள் ஸ்ரீ வீரசேகர ஞான தேசிகரின் சீடரான ஸ்ரீ கிருஷ்ண சாமி என்பவரை மடாதிபதியாக நியமித்துச் சென்றார் கள். கிருஷ்ணசாமி 1942 ஆம் ஆண்டு வரை மடாதி பதியாக இருந்து பிறகு கோவிலூர் ஸ்ரீ மஹாதேவஞான தேசிக சுவாமிகள் கட்டளைப்படி ஸ்ரீ மகா. கோவிந்த சாமி சுவாமியவர்களை மடாதிபதியாக நியமித்துச் சமாதிய டைந்தார். ஸ்ரீ மகா. கோவிந்தசாமி சுவாமியவர்கள் தம் சீடராகிய வாசுதேவசாமி சுவாமி என்பவரை உதவித் தலைவராக நியமித்து 1947 ஆம் ஆண்டுவரை நடத்தினார் கள். ஸ்ரீ வாசுதேவசாமி சுவாமிகள் அவர்கள் 1956-ஆம் ஆண்டிற் சமாதியடைய வாசுதேவ சுவாமிகளை மடாதிபதி யாக ஏற்படுத்தியிருந்த ஸ்ரீ மகா. கோவிந்தசாமி சுவாமி யவர்கள் 1956-ம் வருஷம் (ஸ்ரீவா சுவாமிகள் சமாதி அடைந்த உடன்) மறுபடியும் மடத்துத் தலைமை பதவியை ஏற்றுக்கொண்டு 1959-ம் வருஷம் டிசம்பர் மீ 13-ம் தேதி வரை மடத்து நிர்வாகங்களைப் பார்த்து விட்டு பிறகு தமக்கும் சென்னை வியாசர்பாடி ஸ்ரீ முக்தா நந்த சுவாமிகள் என்பவருக்கும் சீடராகிய மு. கோ. கிருஷ்ணசாமி சுவாமி அவர்களை மடாதிபதியாக 1959-இல் (13-12-59) நியமித்தார். டை மு.கோ. கிருஷ்ண சாமி சுவாமிகளவர்கள் நாளிது வரை மடாலயத்தைச் சீர்திருத்திப் பல அடியார்களைத் தங்கச் செய்து அவர்கட்கு உணவு உடை முதலியவைகளையளித்து ஆதரிப்பதுடன் நாள் வழிபாடு சிறப்பு வழிபாடாகிய குருபூசைப் பெரு விழா முதலியவைகளையுஞ் சிறப்பாகச் செய்து வருகிறார் கள். முன்போலல்லாமல் இப்பொழுது பல அடியார்கள் தங்கிப் பூசா காரியங்கள் சாஸ்திர விசாரணை நிட்டை முதலிய காரியங்களைச் செய்வது எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. இச்சுவாமி களுடைய அருளாட்சியில் மடாலயம் இன்னும் பல வகைகளினுஞ் சிறந்து விளங்குமென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

# ஸ்ரீ பாற் சுவாமிகள் வரலாறு

## (பிற்சேர்க்கை)

[ஸ்ரீ பாற்சுவாமிகள் வரலாற்றுச் சுருக்கத்தைப் பார்த்த ஓர் அன்பர், 70 வயதில் சுமார் 30 ஆண்டுகட்கு முன் காலஞ் சென்ற தம்முடைய தாத்தா ஸ்ரீபாற்சுவாமிகளைப் பற்றிய அற்புத செய்திகள் பலவற்றை அவர் தமக்குத்தாஞ் சிறுவராயிருக்கும்போது சொன்னுரென்றும் அவற்றுட் பல செய்திகள் மறந்து போய்விட்டன என்றுங் கூறிப் பல செய்திகள் கூறினுர். அவற்றுள் வரலாற்றுச் சுருக்கத்துள் வராத செய்திகள் சில இருந்தன. அவைகளை உடனே அச்சிடாவிடின் காலப்போக்கில் மறைந்து போகக் கூடுமென்று கருதி உடனே அச்சிட்டுப் பிற்சேர்க்கையாகச் சேர்த்திருக்கிறேும். மறுபதிப்பில் புத்தகத்தோடு சேர்க்கப் படும். இச்செய்திகளுள் பின்னுள்ளவை ஸ்ரீபாற்சுவாமிகள் சமாதியடைந்த பிற்பாடு நிகழ்ந்தவை.]

### பின்தொடர்ந்து பிடிக்க முடியவில்லை

ஒருநாள் ஸ்ரீபாற்சுவாமிகளவர்கள். தஞ்சைக்குக் கிழக்கேயுள்ள சிற்றூர் ஒன்றில் பாதைவழியே சென்று கொண்டிருந்தனர். ஸ்ரீ பாற்சுவாமிகளின் பெருமையை நன்குணர்ந்திருந்த சிலர் சுவாமிகளிடம் பணிந்து திருநீறு பெறவேண்டுமென்று எண்ணினர். அவ்வாறு எண்ணிய அவர்கள் நல்ல மனிதர்களல்லர். பொய் பித்தலாட்டம்' சூது, வாது, குடி முதலிய தீய ஒழுக்கமுடையவர்கள். இவர்கள் சுவாமிகளைப் பணிந்து திருநீறுபெறும் பொருட்டுப் பின் தொடர்ந்தனர். மெய்யறிவுப் பார்வை

யுடைய அடிகளார்க்கு இவர்களுடைய எண்ணந்தெரி யர்மற் போகுமோ பின் தொடர்ந்தவர்கட்குப் பத்து அடி முன்னே சென்று கொண்டிருந்த சுவாமிகள் திடீரென்று நூறு அடிகட்கு முன்னே காணப்பெறுவதும் கிட்டே நெருங் கினுல் இருநூறு அடிகட்கு முன்னே காணப்பெறுவதும் ஒருபர்லாங் தொலைக்கு அப்பாற் காணப்படுவதுமாகப் போக்கு காட்டிப்பின் திடீரென அடியோடு மறைந்தே போயினர். பின்தொடர்ந்தவர்கள் நாம்நல்லவர்க ளல்லர்.'' 'நாம் நல்லவர்களாக மாறினுல் அதற்குப்பின் சுவாமிகள் அருள்புரிவார்கள்'' என்று கூறிக்கொண்டு திரும்பிவிட்டது மன்றிப் பிறகு தங்களுடைய பொல்லாத நடவடிக்கைகளைக் குறைத்துக் கொண்டு நல்லவர்களாக நடக்கத் தொடங்கினர்.

## கதலிக்காய்க்கள்ளன் நல்லறிவு பெற்றது

ஸ்ரீபாற்சுவாமிகள் சமாதியடைந்த பிற்பாடு சுவாமி களைச் சமாதி வைத்துப் பூசை முதலிய திருப்பணிகளைச் செய்துகொண்டிருந்த சுவாமிகள் வாழைத் தோட்டம் வைத்திருந்தனர். அத்தோட்டம் சமாதிக் கோவிலுக்கு வடபால் கோயிலை ஒட்டியிருந்தது. ஒரு வாழை மரத்தில் காய் முற்றிப் பழுக்கும் நிலையில் இருந்தது. அது பழுத்தால் பூசைக்காகுமென்று மடத்துச் சுவாமிகள் எண்ணமிட்டுக் கொண்டிருந்தனர். கள்ளநோக்கமுடைய ஒரு மனிதன் பகலிற் சுற்றிப் பார்த்தான் மறுநாள் இரவு வந்து அந்த வாழைக் குலையை வெட்டிக்கொண்டு போய்விட வேண்டுமென்று முடிவு செய்தான். மறுநாள் பௌர்ணமி

யாகையால் நிலவொளி நன்றாக இருந்தது. வாழைக் குலையைக் களவு செய்ய எண்ணிய கள்ளன் நள்ளிரவில் வாழைக் குலையை வெட்டச் சென்றான். ஒரு நல்ல பாம்பு குலையின் மீதிருந்து படமெடுத்துக் கொண்டிருந்ததன்றிப், 'புஸ்'' என்று சீறிக்கொண்டும் எழுந்தது. பாம்பைக் கண்டால் படையும் நடுங்குமெனின் தனிக்கள்ளன் அஞ்சாமலிருப்பானோ. பதற்றமடைந்துஅவ்விடத்தைவிட்டு ஓடிப்போனான். ஸ்ரீபாற் சுவாமிகளுடைய திருவருளால் அப்பாம்பு அவனைப் பின் தொடரவில்லை. அக்கள்ளனுக்கு நல்லறிவு உண்டாகியது. அவன் மறுநாள் வாழைப்பழக் குலை ஒன்றை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து மடத்துச் சுவாமிகளிடங் கொடுத்து - அதனைப் பாற்சுவாமிகட்குப் படைக்க வேண்டுமென்று கூறியதோடு தான் வாழைக் காய் களவு செய்தற்கு வந்ததையும் நல்ல பாம்பு சீறி வந்ததையும் ஒளிக்காமல் கூறியதோடு தன் பிழையை மன்னிக்க வேண்டுமென்று சுவாமிகளிடமும் சமாதிக் கோயிலிலும் வேண்டி வணங்கிச் சென்றான். மடத்துச் சுவாமிகளும் களவுத் தொழிலை விட்டுவிடுமாறு அவனுக்கு நல்லுரை கூறித் திருநீறு கொடுத்து அனுப்பினார்கள்.

**உண்டியற் கள்ளர்கள்**

ஸ்ரீபாற் சுவாமிகளின் சமாதிக் கோயிலில் திருப்பணி செய்து கொண்டிருந்த சுவாமிகள் ஒரு செப்புக்குட உண்டியலைச் சமாதிக்கு முன்னால் ஒரு மரத்தில் இரும்புச் சங்கிலியாற் கட்டி வைத்திருந்தனர். அக்குடத்தில் பாதி யளவு காசுகள் விழுந்திருந்தன. ஒரு நாள் இரவில் இரண்டுகள்ளர்கள் அந்தச் செப்புக் குட உண்டியலைக்களவு செய்து கொண்டு போதற்கு வந்தனர். சங்கிலியை

அவிழ்த்துக் குடத்தைத் தூக்கினர். அரைக்குடமளவு காசுகள் விழுந்திருந்தபடியால் எளிதாக எடுத்துக் கொண்டு கோயிலைவிட்டு வெளியே வந்தனர். தோட்டத்தைக் கடந்து வெளியேறுகிற சமயத்தில் அக்குடத்தை இருவராலுந் தூக்க முடியவில்லை மறுவிநாடி பாரத்தைத் தாங்க முடியாமற் கீழே போட்டுவிட்டனர். பிறகு அக்குடத்தைத் தூக்குவதற்கு அவர்கள் எவ்வளவோ முயற்சி செய்து பாரத்துங் குடத்தை மீளவும் ஓர் அங்குலம்கூட மேலே தூக்கமுடியவில்லை. இதனைக்கண்டு அக்கள்ளர்கள் மிகுந்த அச்சமடைந்தனர். இக்குடத்தின் மீது பேயோ பிசாசோ ஏறி அமுக்குகிறது. அது நம்மை ஒன்றுஞ்செய்யாமல் விட்டுவிட்டால் போதுமென்று கூறிக் கொண்டே அவ்விடத்தைவிட்டு ஓடிப்போயினர். மறுநாள் மடத்திலுள்ளவர்கள் உண்டியற்குடம் வெளியே கிடப்பதைக்கண்டு உள்ளே எடுத்துச் சென்றனர். கள்ளர்கள் தூக்கிக்கொண்டு போய் வெளியே போட்டு விட்டுப் போனதன் காரணம் அவர்கட்கு விளங்கவில்லை. அவர்கள் அதைப்பற்றிப் பால் சுவாமிகள் ஏதேனும் திருவிளையாடல் செய்திருக்கக் கூடுமென்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தார்கள். இரண்டொரு மாதங்கள் கழிந்த பிறகுதான் கள்ளர்கள் உண்டியற் குடத்தைப்போட்டு விட்டுப் போய்விட்டதன் காரணம் அவர்கட்டு விளங்கியது

## * கள்ளர்கள் பொய்த் தோற்றங் கண்டு கலங்கியது

பூண்டிப் பக்கம் உள்ள செல்வர் ஒருவர் ஸ்ரீபாற்சுவாமிகளிடத்தில் மிகுந்த மெய்யன்பு கொண்டிருந்தார். சுவாமிகள் அந்த அன்பருடைய இல்லத்தில் அடிக்கடி

---

* இந்நிகழ்ச்சி சுவாமிகள் இருந்தபொழுது நிகழ்ந்ததா சமாதியடைந்த பின் நிகழ்ந்ததா என்பது தெரியவில்லை.

சென்று தங்கியிருப்பது வழக்கம். ஒருநாள் ஏழெட்டுக் கள்ளர்கள் அச்செல்வருடைய இல்லதிற் கொள்ளையடிப்ப தென முடிவு செய்தனர். நள்ளிரவில் ஊருக்குள் நுழைந்து அக்கள்ளர்கள் ஒரு மறைவிடத்தில் இருந்து கொண்டு தங்களில் இரண்டு பேரை அச்செல்வர் வீட்டுப்பக்கம் அனுப்பி மக்கள் நடமாட்டம் இல்லாமலிருக்கிறதா என்று பார்த்துவரச் செய்தனர். அக்கள்ளர்கள் சிறிது தொலை வில் நின்று பார்த்தபோது அச்செல்வருடைய வீட்டு வாசலில் ஐம்பது அறுபது பேர் தடிகளோடு உட்கார்ந் திருப்பதுபோல் தெரிந்தது. அவர்கள் இருவரும் அஞ்சித் தங்களுடைய கூட்டாளிகளிடஞ் சென்று, "நாம் கொள்ளை யடிக்க வருவதை வீட்டுக்காரர் எப்படியோ தெரிந்து கொண்டு ஐம்பது அறுபது ஆட்களைத் தயார் செய்து தடிகளோடு வீட்டு வாசலில் வைத்திருக்கிறார். நாம் அங்கு சென்றால் ஒருவராவது உயிரோடு மீள முடியாது" என்று கூறினர். இதனைக் கேட்டதும் அனைவரும் அஞ்சி அவ்விடம் விட்டு மெதுவாக நழுவி விட்டனர். இச்செய்தி வீட்டுக்காரருக்குத் தெரியாது. பலநாள் கழித்துக் கள்ளர்களில் ஒருவன் இச்செய்தியை ஒருவரிடங் கூறினான். அவர் வீட்டுக்காரரைக் கண்டு, "கள்ளர்கள் கொள்ளை யடிக்க வருதலை முன்னமே தெரிந்து ஐம்பது அறுபது ஆட்களைத் தடிகளோடு தயார் செய்து வீட்டு வாசலில் வைத்திருந்தீர்களாமே அப்படியா ?" என்று கேட்டார். வீட்டுக்காரர் கள்ளர்கள் கொள்ளையடிக்க வருகிறார்கள் என்று எனக்கொன்றுந் தெரியாது. நான் ஆட்களைத் தயார் செய்து வைக்கவுமில்லை" என்று கூறினார். பிறகு "அவ்வாறு ஏதேனும் ஆட்கள் இருந்ததுபோல் தெரிந் திருந்தால் அஃது என்னை அடிமை கொண்டு அருள் செய்து கொண்டிருக்கும் பாற் சுவாமிகள் செய்த புதுமையாகத் தான் இருக்கவேண்டும். அவர்கள் எங்கள் குடும்ப தேவதையாக விளங்குகிறார்கள்" என்று கூறினார்.

முறிந்த கால் கூடியது.

பார்ப்பன அன்பர் ஒருவர் ஸ்ரீபாற் சுவாமிகளிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். அவர் ஒரு நாள் தம் நண்பர்கள் சிலரோடு தஞ்சை பெரிய கோவிலில் உள்ள சுப்பிரமணியர் கோயிலில் இருந்து உரையாடிக் கொண்டிருந்தார். அவருக்கு அகவை 55 இருக்கும். அவர் கீழே யிறங்கும்பொழுது தவறி கீழே விழுந்துவிட்டார். மிக உயரத்தில் இருந்து விழுந்தபடியால் இடது கால் எலும்பு ஒடிந்துவிட்டது. அவரை அங்கிருந்து தூக்கியெடுத்து அரசினர் மருத்துவமனையிற் கொண்டுபோய்ச் சேர்த்தனர். அங்கு மூன்று மாதம் வரையில் மருத்துவஞ் செய்யப்பட்டது. நவீன முறைகளையெல்லாம் கையாண்டு மருத்துவஞ் செய்தும் முறிந்துபோன எலும்பை ஒன்ருகச் சேர்க்க முடியவில்லை. “இனிமேல் இந்தக்கால் நொண்டியாகத்தான் இருக்கும் நடக்க முடியாது. மருத்துவஞ் செய்வதிற் பயனில்லை” என்று கூறிவிட்டனர். வீட்டையடைந்த அவர் கைத்தாங்கலாக வண்டியிலேறிப் பாற்சுவாமிகளின் சமாதிக் கோயிலுக்கு வந்து ஒவ்வொரு குருவாரமும் தரிசனஞ் செய்தலையும் அருச்சனை செய்தலையும் மேற்கொண்டார். சிறப்பான திருமுழுக்கு முதலியவைகளையுஞ் செய்வித்தார். மூன்று மாதங்கள் இவ்வாறு செய்தார். கால் ஒடிந்து ஆறுமாதங்களாகி விட்டன. ஒடிந்த எலும்பு சிறிது சிறிதாக ஒட்டியது. முதலில் தடி பிடித்துக்கொண்டு நடக்கத் தொடங்கியவர் மிகு விரைவில் தடியில்லாமலே நடக்கலாஞர். ஏழாவது மாதத்தில் முற்றிலுங் குணமாகிப் பழைய நிலைமைக்கு வந்து விட்டது. இவ்வாறு கால் கூடியது ஆங்கில மருத்துவருக்கும் மிகுந்த வியப்பையளித்தது. இப் புதுமையைக் கண்ட அன்பர்கள் இது பாற்சுவாமியின் திருவருட் செயலாகும்” என்று கூறி ஸ்ரீபாற்சுவாமிகளிடம் அன்பு செலுத்தலாஞர்கள். கால் குணமாகப்பெற்ற அன்பர் மேலும் பாற்சுவாமிகள் சமாதிக்கு அடிக்கடி வந்து தொழுதலை மேற்கொண்டிருந்தார்.

உ

ஸ்ரீபால்சுவாமிகள் எனவும் பாபநாசஞ் சுவாமிகள்

எனவும் பெயர் வழங்கும்

★

ஸ்ரீ நாராயண சுவாமிகள் பேரில்

★

பூண்டி உபாத்தியாயர்

தருமலிங்கம் பிள்ளையவர்கள்

இயற்றிய

★

# பதிகம் முதலிய தோத்திரப் பாடல்கள்

௪

# பதிகம்

## காப்பு

### வெண்பா

பார்பணியுந் தேசிகனும் பாபவிநா சன்பேரில்
ஏர்பெறவே பாடல் இடம்புதற்குச் —சீர்மேவும்
எந்தையெனுந் தந்திமுகத் தீசாவென் னுவதனில்
சந்ததமும் வந்தருள்தந் தாள்.

### நூல்

மண்ணுலகில் வாழுயிர்கள் வாடாம லிங்குதித்துத்
திண்ணமுறு நல்லமுதாஞ் சீதவமு தைப்பொழிந்து
விண்ணவர்பூ மாரிபெய விளங்குசிவத்
தொடுகலந்தோய்
பண்ணவர்கள் போற்றடிதா பாற்சாமி யாந்தேவே. 1

பத்திநெறி யறியாத பாவியர்பால் நண்ணிமிகப்
பித்தர்களைப் போலலைந்து பிதற்றுகின்ற நாயேனைச்
சித்தமகிழ்ந் துன்னடியார் தேறலுனும் நல்லருளைப்
பத்தனுக்கிங் கீந்தருளும் பாற்சாமி யாந்தேவே. 2

ஆடியுனைப் பாடிமிக அருளடைந்தோ ரன்றனந்த
கோடியுண்டென் றின்பமுற்றுக் கூறுகின்றேன் கற்பகமே
தேடரிய நிட்களமே சிற்பரமே யேழையெற்குப்
பாடளியா மற்பதந்தா பாற்சாமி யாந்தேவே. 3

நீங்காக் கவலையினுல் நெஞ்சமெலாம் புண்ணாகிச்
சாங்காலம் வாராமுன் சற்குருவே யென்றனக்குப்
பூங்கமலப் பொற்பதத்தைப் போற்றியுய்ய நீயுகந்து
பாங்காய் வரமளிப்பாய் பாற்சாமி யாந்தேவே. 4

சாகரத்தின் திரையையொத்த சனனமெனும் வெவ்வினையை
ஏகமுனிந் தின்பமுட னீடேற்றுங் கடனுனக்கே
தேகமெலாம் வெண்பொடியார் திவ்வியகுண தேசிகனே
பாகம்வைத்துக் காத்தருள்நீ பாற்சாமி யாந்தேவே 5

செஞ்சரணக் கஞ்சமலர்த் தேனையுண்டு யான்புளகித்
தெஞ்சலிலா வுன்பெயரை இயம்புவது மெக்காலம்
அஞ்சலிசெய் தேழைமிக அலறுதற்கா அருளளித்தால்
பஞ்சமுண்டா மென்றோசொல் பாற்சாமி யாந்தேவே. 6

ஆலடியி னால்வருக்கன் றருள்புரிந்தோய் யாதுகொலோ
தாலமெழா தென்னிமித்திற் சாற்றுமென்றன் சற்குருவே
ஞாலமெலாம் போற்றுகின்ற நற்பதத்தோய் வாய்திறந்து
பாலினுமுன் இன்சொலருள் பாற்சாமி யாந்தேவே. 7

வீடுமுதல் மாடுமக்கள் வேண்டுபொருள் யவையுநான்
தேடியுனைப் போற்றாமல் சிந்தைகெட்டேன் இந்தமட்டும்
கூடுவிட்டே யென்னுயிரைக் கூற்றன்கொண்டு போகாமல்
பாடியுனை யான்தொழுவேன் பாற்சாமி யாந்தேவே. 8

கச்சணியு மங்கையர்கள் கனதனத்தைக் கண்டுகண்டு
இச்சைமிக வுண்டாகி எழுநரகில் வீழாமுன்
எச்சமிலுன் அன்பர்களோ டின்புறுநல் வாழ்வளிப்பாய்
பச்சைநிற மாணுமப் பாற்சாமி யாந்தேவே. 9

சிந்தைமகிழ்ந் துன்பெயரைச் செப்புகின்ற உத்தமர்பால்
அந்தகன்வந் தாவிதனை அருங்கயிற்றால் ஈர்ப்பானோ
கந்தமலர்ப் பூம்பொழில்சூழ் கற்பகமே நின்பதத்தைப்
பந்தமறத் தந்தெனைக்கா பாற்சாமி யாந்தேவே. 10

பதிகம் முற்றிற்று.

## திருவிருத்தம்

தேவதேவ சிவசிதம்பர தேசிகாவென் றிறைஞ்சினோர்
பாவ புண்ணியம் போக்கி நல்லருள் பாலிக்
கும்பரதெய்வமே
ஏவ லாளியென் ருவ லாயெனை எண்ணி யன்பர்க
ளோடுசேர்
நாவ லர்தொழும் பாதனுமென்றன் நாரா
யணமூர்த்தியே 1
சொல்லு தற்கரி தான நின்மலச் சோதியேசுக வாரியே
வெல்லு வதற்கொணாத வெவ்வினை யென்னுமாயை
விரும்பியே
எல்லை தோறுமெ னெஞ்ச மன்றி யிருக்க வேறிட
மில்லையோ
நல்ல வர்தொழுந்தெய்வ மேசொலும் நாராயண
மூர்த்தியே. 2
துறந்த ஞானிய ரச்சுத னயனன்சு ரர்களாயினுந்
தும்பிபோல்
கறங்கி வீழச்செய் வாட்கண் மங்கையர் கைதவப்
பெருமையலால்
மறந்து வார்வலைப் பட்ட பாவியேன் மாநரகடை
யாமலே
நறுந்தணின்னரு டந்துகந்தாளு நாராயண
மூர்த்தியே. 3
தந்தை தாய்குரு தெய்வமுமுனைத் தவிரவெத்
தலத்தினும்
சுந்தரா வேறொருவருண்டோ நீ சொல்லுவாய் பரிபூரணா
வெந்துயர் தரும் பூங்கணைமதன் விட்டெனை
வதையாமலே
நந்திபின் கீழிடந் தந்தாளுமென் நாராயண
மூர்த்தியே,

காய நிச்சய மென்றிந் நாள்வரைக்
காதல் கொண்டிதைக் காத்துநான்
ஆய மென்னென்று பார்க்கையில்
துன்பமன்றி யாது மடைந்திலேன்
நேய மாமறை நீதி யேநெஞ்சு மஞ்சுதே
நெட்டுயிர்ப்புடன்
ஞாய மாமோ வுமக்கிதுசொலும் நாராயண
மூர்த்தியே. 5

அலைக டற்றுரும் பென்னவென்மனம் அங்குமிங்குந்
திரிந்துமே
நிலையி லாமல் தவித்திடச் செய்தல்நிர்க்கு ணவென்
மேற்றர்க்கமா
கொலைகுரு நிந்தை களவுபொய் கட்குடித்தலைந்து
மிருப்பினும்
நலமு டன்றவிர்த் தாண்டுகொள் ளுமென்
நாராயண மூர்த்தியே. 6

மித்தையாமிச் சகத்தையேழை
விரும்பிமெய்யென நம்பியே
சித்தநைந்துன் றிருப்புகழியான்
செபித்திடாதது குற்றமே
பத்த னுக்குன் னகங்கனிந்திளங்
கன்றைக்காக்கும் பசுவென
நத்தி யென்றெனை முற்றுங்காத்தருள்
நாராயண மூர்த்தியே. 7

தாயி லாப்பிள்ளை யென்னவென்னிரு
கண்களில் நீர் ததும்பியே
ஓய்விலா தோலமிட் டலறுதல்
உன்செவிக் கேறவில்லையோ
சேயென நினைந் தென்றுமுன்னருட்
டேனினையளித் தின்பமாய்

நாயி னுங்கடை யேனையாளுமென்
நாராயண மூர்த்தியே 8

செய்ய மாமலர் வேத னுந்திரு
மாலுந்தேடியுந் தேடொணு

ஐயனே யேழையா மெனைச்சினந்
தந்தகன் பகடேறியே

வையம் யாவும் அதிர்ந்திடக்
கூவிவாவெனுஞ் சொலைக்கேட்டுநான்

நையவோ சொலும் ஐயநின்னருள்
நாராயண மூர்த்தியே. 9

பானுமுன்பனி போல்வினை தீர்த்திப்
பாரிலென்னுடல் வீழுமுன்

வானவர்க டொழும்பதந் தந்து வாழ்விப்ப
துன்கடமையே

மானிலத் துயிர்யாவு முய்யநன்
மானிடச்சட்டை சாத்தியே

ஞானப் பால்கொடுத் தீச ஞயமர்
நாராயண மூர்த்தியே. 10

திருவிருத்தம் முற்றிற்று.

---

## நற்புத்திகேள் மனமே!

நற்புத்தி கேள்மனமே நாராயண சுவாமியெனும்
சற்குருவின் தாள்பணிந்திடச் சாயுச்சியம் தந்தாளும்
மனமே. 1

கற்கண்டோ நற்சுதையோ கன்னற்பாகோ கனிரசமோ
பொற்பதப்போதிரசம்புனிதற்கோபுலனும்பணி
மனமே. 2

பக்தர்க் கெளியவனும் பன்மறைச்சுரு ளானவனும்
சித்தமொரு மித்திருந்தப் பொருளடி தியானித்திரு
மனமே. 3

புத்தமு தொத்தமொழிப் பூவையென்றினமும் புகழ்ந்தே
இத்தரை நாய்போல் திரிந்தால் இயமனுக்கென்
செய்குவாய் மனமே. 4

அஞ்சலி செய்திறைஞ்சும் அன்பர்க் கஞ்சியவர் தலையின்
துஞ்செழுத்தைத் துடைப்பா னயனப் பதந்தொண்டு
செய்வாய் மனமே. 5

எஞ்சலிலா திலங்கும் இறையேயென் றியம்புவையேல்
அஞ்சுமுகங் காட்டா தாறுமுகங் காட்டியாளும் நினை
மனமே. 6

மூவாமு தற்பொருளே மும்மலவேரறுத்த தாளென
ஓவா துகந்துரைத்தால் பிறப்பிறப் பொழிந்திடுங்கேள்
மனமே 7

தேவாதி தேவர்தொழுஞ் சிற்றடியினன்மா மலரால்
தூவா தவர்க்கருளுற்ற முண்டாகிச் சுகங்கிட்டுமோ
மனமே. 8

சடிலமெய் யென்றெண்ணி நான்
தத்தளித்தது போதுமென்றும்
அடியவர்கள் கூட்டத் தமர்ந்திடு நல்வரம்
அருளென்றுங் கேள்மனமே. 9

உடல்பொ ளாவிமூன்று முள்ளன்போ
டவர்க்கொப் பித்தால்
விடயவா தனைக ளோடச் சினந்து விலக்கும்
வேலன் மனமே. 10

ஆவிக் குறுந்துணையா மையவென வருகே குடியாய்
ஓவியம்போ லசையாம லிருத்திவைத்துய் விக்குங்
கேள் மனமே. 11

பாவ விநாச வென்றோர் பாழ்வினையாம் பெருங்கடலைச்
சேவடியாந் தெப்பமீந் தவரைக் கரைசேர்த் தருளும்
மனமே. 12

# இசைப் பாடல்கள்

இராகம்—பிலகரி ] [ தாளம்—திஸ்ரம்

## பல்லவி

மறவா திருப்பாய் நீ மனதே
வனப்புயர் மகான்பதம் (மற)

## அநுபல்லவி

நறுமலர்களால் அருச்சனை செய்து
நாராயணசுவாமி நாமமதை யோதி (மற)

## சரணங்கள்

1 நல்வினை தீவினையடி மூலமதை
நாசஞ்செய் தீடேறும்படி
நல்லரு ளுக்ந் தியும்
நான் சொல்வது கேள்
வில்லுமிழும் வேற்கண்கள்
மாதரை வேண்டி
அழியாதே நமதாண்டவனும்
பாற்சுவாமியை (மற)

2 பித்துப் பிடித்தலைந்திடும் நாயதுபோல்
சகத்தா சையைவைத்துநீ
சுற்றிச் சுற்றித் திரிந்
ததினு லென்ன சொல்
பத்தியாய் பாவநாசஞ் சுவாமியெனப்
பாடிப் பணிந் தாடுன்
வினையோடும் பகற்பனி
போற்றினம் (மற)

3 வனச மாதென்றும் வாழ்பூவுலக தனில்
வசிக்கும் பல்லுயிரையும்
வாழ்விக்கும் பொருட்டாக
மனதிரங்கிச்

ஜெனன மரணமென்னுஞ் சமுத்திரந்
தீர்த்துக் கதிதர
வந்திடும் மூர்த்தியெனும்
பாற்சுவாமியை (மற)

இராகம் — செஞ்சுருட்டி] [தாளம் — திரிபுடை

**பல்லவி**

பாபவிநாச — என்
பாலுகந்தாளீசா (பாப)

**அநுபல்லவி**

தூப தீப மிட்டுன்னைத்
தொழுதிலே யான் முன்னைத்
தொடரும் வல்வினைகள்
தன்னைத் தெரிலைத்தருளென்னை (பாப)

**சரணங்கள்**

1 அன்பர்களிருதய மமர்ந்தவருக்குரிய
அரும்பொருள்க ளருளிய நமசிவய (பாப)

2 தண்டாயுத மெடுத்துச் சமன்வந்தென்னைப் பிடித்துக்
கொண்டு போநகரமற் சினத்துக் கொல்லுமடித்து
(பாப)

3 சஞ்சித வினைவந்து சார்ந்த தறுனைந்து
தயங்கா தென்மேலுகந்து ஆண்டருள் தந்து
(பாப)

இராகம் - நாதநாமக்கிரியை] [தாளம்—ஆதி

**பல்லவி**

பணிந்திடுவாய் மனமே பால்சுவாமியின் பதமே
(பணி)

## அநுபல்லவி

அணிந்திடு செண்பக மல்லிகை மின்னே
அகற்றெளி வீசுசெந்தாமரை புன்னே
மணந்திகழ் முல்லையிம் மலர்களான் முன்னே
மலர்ப் பதந்தூவிட வாழ்விக்கு நின்னே

(பணி)

## சரணங்கள்

1 எண்டிசை யெங்குமிலங்கிய தேவே
இணையிலி யென்றுனை யேத்துவோர் கோவே
மண்டியவினை தொலைத்தாளென்றென்றுவே
வழுத்து தற்கருளென வஸ்துவைக் கூவே

(பணி)

2 மதிநிகர் வதனத் தாளென நினைந்தும்
மனைதொரு நாயென நிகழ்ந்திட நுழைத்தும்
பதமருளிய குருபரனடி மறந்தும்
படுகுழியினில் விழாமலி தறிந்தும் (பணி)

3 நித்திய நிராமய நின்மலச் சோதி
நிரஞ்சன நிட்களனென்னும் பிரக்யாதி
பக்தர்கள் சித்தய துறைந் திடுமாதி
பரனடி தொழுதுபஞ் சாக் கரமோதி (பணி)

---

இராகம் — கமாசு] [தாளம் — திரிபுடை

## பல்லவி

பாபவிநாசா
பதந்தந்தாளீசா (பாப)

## அநுபல்லவி

தாபமோடுன் பதத்தாமரை மலர்த்தேனைத்
தந்தாளா விடிலேழை யெந்த விதத்திலுய்வேன்

(பாப)

## சரணங்கள்

1 மன்னு மாமணியே மதுர மாங்கனியே
முன்னரும் வினையே முயன்றோட முனியே
மின்னுமணி விளக்கின் மிளிசுடரனையாயான்
அன்னை வயிற்றி லின்னமடையாம லருள் செய்வாய்
(பாப)

2 சேவடி தேடித் தியங்குகிறேன் பாடி
ஆவலோ டோடி அடியேன் முன்னடித்
தேவதேவர்க டொழுந் திகம்பரனே வந்து
பாவம கற்றிநின்றன் பழவடியாரொடு சேர்
(பாப)

3 அன்பர்கண் மனமே அமர்ந்திடுந் தனமே
இன்பமாம் பதமே எனக்கருள் சிவமே
புன்புலால் உடலைநா னம்பியே மிகவும் வீண்
பொழுது போக்கினே னென்னை முழுதுங்
காத்தருள் செய்வாய் (பாப)

---

இராகம் — மோகனம்] [தாளம் — ஆதி

## பல்லவி

போற்றி செய்துய்வாய் மனதே
மகான் பொற்பாதம் (போற்)

## அநுபல்லவி

நாற்றிசையோர் கொண்டாடும்
நாராயண மூர்த்தியை
நாவினு லனுதின மாவலொடு புகழ்ப்
பாவபுண்ய மகற்றிச் சேவடி கொடுத்தாளும் (போற்)

## சரணங்கள்

1 மாமறை முடிவிலென்றும்
அமர்ந்திருந்து வாழும்
வஸ்துவைப் புகன்று மிருந்தானுந்தன்

காம முழுமையுங் கொன்று மதுவுனக்குக்
கழலிரண்டுந் தருமென்று மிதனை நம்பி
நேமமுடனே நித்யமான நின்மலனே நீ
நெஞ்சமகிழ்ந்து நாராயண சுவாமியென்
றஞ்சலி செய்வினையனல் மெழுகாகும் (போற்)

2 மாதர்களாசை யைக் கொண்டு — அவர்
கண்களாம் வலையின் மென்மேலுங்
கட்டுண்டு கணக்கிலாத
ஏதமடைந்தது முண்டு அதனைக் கண்டு
எடுத்தோதினேனிதை விண்டு
பார்த்தாகிலும் நீ
போதபரிபூரண சோதி சொரூபமதைப்
போற்றி நாராயண சுவாமி யென்றிட வினை
மாற்றிவைத் தருளுகந் தூட்டுமலர்ப் பதத்தைப்
(போற்)

3 உயிராம் பயிர்க்கெரிந்து போகாமல் நர
வுருவெடுத் துலகெழுந்து தீங்குகண் முற்றும்
அயில்சேரயிலையெறிந்து தடிந்தருளைக்
குயிலுகி மேன்மேற் சொரிந்து
முத்தியளித்துச்
செயிரிலாத சின்மய சிவமதனிற் கலந்த
சிற்பரனென்னு நாராயண சுவாமியின்
நற்பதந் தொழுதிட நமனும்வந்
தணுகிடான் (போற்)

[illegible]பயன்

நாரண[illegible]பேர் [illegible] நற்சரிதம் கற்போர்கள்
பூரண[illegible] [illegible]நல் சரணப்போய்
நாடுமறை [illegible] நவி[illegible]கிற மெய்ஞ்ஞான
வீடு புகு[illegible]

கோவிலூர் மடாலயம்
KOVILOOR MADALAYAM

ஓம் நாராயண ஞான தேசிகாய நம;
ஓம் தத் ஸத்

4811
Q1:3324